Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 283

சனிக்கிழமை
06 செப்ரெம்பர் 2025

ஆவணி 21 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 16
விலை – ரூபா 50

## சந்நிதியானுக்கு இன்று தேர்!

யாழ்ப்பாணம், செப். 6
தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத் தேர்த் திருவிழா இன்று சனிக்கிழமை காலை 7 மணியளவில் இடம்பெறவுள்ளது. செல்வச்சந்நிதி ஆலய மஹோற்சவம் கடந்த 23 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து இடம்பெற்று வரு

15



# செம்மணி அகழ்வுப் பணி இன்றுடன் நிறைவடையும்

### மூன்றாம்கட்ட நடவடிக்கையை விரைவில் ஆரம்பிக்க வலியுறுத்து

**யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 6**

**யாழ்ப்பாணம் செம்மணி மனிதப் புதைகுழியின் இரண்டாம்கட்ட அகழ்வுப் பணிகள் இன்றுடன் நிறைவடையவுள்ளன. இதையடுத்து, மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகளை விரைவில் ஆரம்பிக்குமாறு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் வலியுறுத்தப்பட்டுள்ளது.**

15

## அமர்ந்திருந்த நிலையில் என்புக்கூடு அடையாளம்

யாழ்ப்பாணம், செப். 6
யாழ்ப்பாணம் செம்மணிப் புதைகுழியில் அமர்ந்த நிலையில் மனித என்புத்தொகுதியொன்று நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளது. செம்மணிப் புதைகுழியின் 44ஆம் நாள் அகழ்வுப் பணிகள் நேற்று முன்னெடுக்கப்பட்ட நிலையிலேயே, இந்த என்புத்

15

## 30x50 சதுரஅடியில் இதுவரை 235 என்புத்தொகுதிகள் மீட்பு!

### நேற்றும் 5 என்புத்தொகுதிகள் அடையாளம்

யாழ்ப்பாணம், செப். 6
அரியாலை- செம்மணி மனிதப் புதைகுழியில் இதுவரை அகழ்வுப் பணிகள் இடம்பெற்றுவரும் 30x50 சதுர அடிக்குள் இருந்து 240 என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டதுடன், அவற்றில் 235 என்புத் தொகுதிகள் மீட்கப்பட்டுள்ளன.

15



## யாழ். பல்கலை வேந்தராக பேராசிரியர் குமாரவடிவேல்

யாழ்ப்பாணம், செப். 6
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வேந்தராக, வாழ்நாள் பேராசிரியர் இ.குமாரவடிவேல் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவால் நியமிக்கப்பட்டுள்ளார். உடனடியாகச் செயற்படும் வகையில், அடுத்துவரும்

15

## தோட்டத்துக்கு சென்ற நபர் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், செப். 6
யாழ்ப்பாணம் மானிப்பாய் பகுதி

15

## திஸ்ஸ விகாரைக்கு எதிராக மீண்டும் இன்று போராட்டம்!

யாழ்ப்பாணம், செப். 6
யாழ்ப்பாணம் தையிட்டி பகுதியில் அமைக்கப்பட்டுள்ள சட்ட

15



ஐ.நா. மனித உரிமைகள் பேரவை

## இலங்கையின் உயர்மட்டக்குழு இன்று ஜெனிவாவுக்குப் பயணம்

கொழும்பு, செப். 6
ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 60ஆவது கூட்டத்தொடர் நாளைமறுதினம் ஆரம்பமாகவுள்ள நிலையில், அதில் கலந்துகொள்ளவுள்ள இலங்கையின் உயர்மட்டக் குழுவினர் இன்று ஜெனிவா

15

## ஐ.நா.வின் கூட்டத்தொடர் நாடாளுமன்றில் விவாதம்

கொழும்பு, செப். 6
ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் தொடர்பில் ஸ்ரீலங்கா நாடாளுமன்றத்தில் விசேட விவாதங்கள் இடம்பெற வாய்ப்புள்ள

15

வெல்லவாய பேருந்து விபத்து

## சாவு எண்ணிக்கை 15 ஆக அதிகரிப்பு

### மேலும் சிலர் கவலைக்கிடம்

கொழும்பு, செப். 6
ஊவா மாகாணம் எல்ல, வெல்லவாய பிரதான வீதியில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு இடம்பெற்ற பேருந்து விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 15ஆக அதிகரித்

15



## 'பிரேக்' கைவிட்டதாலேயே விபத்துச் சம்பவித்தது!

உயிர் பிழைத்தவர் தகவல்

கொழும்பு, செப். 6
வெல்லவாய பேருந்து விபத்து 'பிரேக்' செயலிழப்பாலேயே சம்பவித்துள்ளதாக விபத்தில் காயமடைந்து சிகிச்சை பெற்றுவரும் பயணியொரு

15



முச்சந்தி முரளி

'சப்பாணி போடவைச்சு சாக்கொண்டு புதைச்சாலும் தப்பாமல் உண்மை வெளியில வரத்தானே வேணும்"

மக்கள் [illegible] தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | ஹந்தஹன ராசி சுப பலன் | NLB ஜய | மெகா பவர் | மஹஜன சம்பத | தன நிதானய | அத சம்பத | சுப தவசக் |
|---|---|---|---|---|---|---|---|
| திகதி 05.09.2025 | திகதி 05.09.2025 | திகதி 05.09.2025 | திகதி 05.09.2025 | திகதி 05.09.2025 | திகதி 05.09.2025 | திகதி 05.09.2025 | திகதி 05.09.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் 4185 | சீட்டிழுப்பு இலக்கம் 1252 | சீட்டிழுப்பு இலக்கம் 0211 | சீட்டிழுப்பு இலக்கம் 2291 | சீட்டிழுப்பு இலக்கம் 5943 | சீட்டிழுப்பு இலக்கம் 1973 | சீட்டிழுப்பு இலக்கம் 0518 | சீட்டிழுப்பு இலக்கம் 0059 |
| ஆங்கில எழுத்து R | வெற்றி இலக்கினம் தும்பம் | ஆங்கில எழுத்து J | ஆங்கில எழுத்து V | ஆங்கில எழுத்து A | ஆங்கில எழுத்து X | ஆங்கில எழுத்து A | வெற்றி இலக்கினம் மகரம் |
| | | | சுப்பர் இலக்கம் 06 | | | | |
| வெற்றி இலக்கங்கள் 09 11 65 75 | வெற்றி இலக்கங்கள் 30 32 42 55 | வெற்றி இலக்கங்கள் 6 2 8 2 | வெற்றி இலக்கங்கள் 48 64 65 75 | வெற்றி இலக்கங்கள் 1 1 4 2 8 5 | வெற்றி இலக்கங்கள் 12 52 63 71 | வெற்றி இலக்கங்கள் 4 2 8 5 | வெற்றி இலக்கங்கள் 04 11 23 43 |
| விசே எழுத்து R | | | | | விசேட எழுத்து X | | |

# புதைகுழி விவகாரங்களில் அரச தலையீடுகள் இல்லை



## அமைச்சரவைப் பேச்சாளர் தெரிவிப்பு

**கொழும்பு, செப்.6**

**செம்மணி மனிதப் புதைக்குழி விவகாரத்தில் அரசாங்கம் தலையிட வில்லை. நீதிமன்ற நடவடிக்கைகளுக்குத் தேவையான வசதிகள் செய்துகொடுக்கப்படுகின்றன என்று அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.**

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு அரசாங்கத்தகவல்திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

செம்மணி விவகாரம் தொடர்பில் சுயாதீன விசாரணைப் பொறிமுறையை நிறுவவேண்டும் என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளதுடன், சர்வதேச நிபுணத்துவத்தின் அவசியமும் வலியுறுத்தப்பட்டுள்ளமை தொடர்பாக வினவப்பட்ட கேள்விக்குப் பதிலளித்தபோதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

செம்மணி மனிதப் புதைக்குழி தொடர்பில் நீதிமன்ற நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

அதனுடன் தொடர்புடைய விடயங்கள் நீதிமன்றத்துக்கே அறிவிக்கப்படும். நீதிமன்றம் சுயாதீனமான நிறுவனமாகும் என்பது அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. நீதிமன்ற நடவடிக்கைகளுக்கான வசதிகள் அரசாங்கத்தால் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.

முக்கியமாக விசேட குழுவொன்றால் அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

மறுபுறம் பொலிஸ் விசாரணைகளும் இடம்பெற்றுவருகின்றன. நீதிமன்றத்துக்கு அறிவிப்பதற்கான தினம் ஒதுக்கப்பட்டுள்ளது. அவற்றுக்கு நாம் இடமளித்திருக்கின்றோம். அந்த விவகாரத்தில் நியாயமான செயற்பாடுகள் இடம்பெற்றுவருவதாக நம்புகின்றோம் - என்றார். (எ-44)

| சுபிரி தன சம்பத | | | |
|---|---|---|---|
| திகதி 05.09.2025 | தினம் வெள்ளிக்கிழமை | வெற்றி வாரம் 0651 | |
| ஆங்கில எழுத்து Y | வெற்றி இலக்கம் 2 2 4 3 0 0 | | |

| Super Ball | | | |
|---|---|---|---|
| திகதி 05.09.2025 | தினம் வெள்ளிக்கிழமை | | |
| சீட்டிழுப்பு வாரம் 2917 | ஆங்கில எழுத்து C | வெற்றி இலக்கம் 07 43 63 70 | |

| சனிதா | | | |
|---|---|---|---|
| திகதி 05.09.2025 | தினம் வெள்ளிக்கிழமை | | |
| ஆங்கில எழுத்து E | வெற்றி இலக்கம் 06 39 69 75 | வெற்றி வாரம் 5078 | |

| SASIRI | | | |
|---|---|---|---|
| திகதி 05.09.2025 | தினம் வெள்ளிக்கிழமை | | |
| வெற்றி வாரம் 0763 | வெற்றி இலக்கம் 22 30 41 | | |

| லக்ன ராசி | | | |
|---|---|---|---|
| திகதி 05.09.2025 | தினம் வெள்ளிக்கிழமை | | |
| துலாம் | வெற்றி இலக்கம் 09 20 32 45 | சீட்டிழுப்பு வாரம் 4629 | |

| KAPRUKA | | | |
|---|---|---|---|
| திகதி 05.09.2025 | தினம் வெள்ளிக்கிழமை | | |
| ஆங்கில எழுத்து Q | சுப்பர் இலக்கம் 37 | வெற்றி இலக்கம் 04 23 32 54 | வெற்றி வாரம் 2093 |

| அத கோடிபதி | | | |
|---|---|---|---|
| திகதி 05.09.2025 | தினம் வெள்ளிக்கிழமை | | |
| ஆங்கில எழுத்து C | வெற்றி இலக்கம் 04 09 69 70 | வெற்றி வாரம் 2743 | |

# வெள்ளைக்கொடி கதையாலேயே போர்க்குற்றச்சாட்டுகள் எழுந்தன

*பொன்சேகாவைச் சாடுகின்றார் நாமல்*

கொழும்பு, செப்.6

பொன்சேகாவின் வெள்ளைக்கொடி கதையால் தான் படையினருக்கு எதிராகப் போர்க்குற்றச் சாட்டு முன்வைக்கப்படுகின்றது. அவர் அதைக் கூறியிருக்காவிட்டால் இந்தநிலை ஏற்பட்டிருக் காது என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச குற்றஞ்சாட்டியுள்ளார்.

பிரபாகரன் தப்பிச்செல்வதற்காக மஹிந்த ராஜபக்ச போர்நிறுத்தம் ஏற்படுத்தினார் என்று சரத் பொன்சேகா கூறியுள்ள விடயம் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

போரில் வெள்ளைக்கொடி (புலிகளால்) காட்டப்பட்டபோது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது என்பதையும் அவர்தான் (பொன்சேகா) சொன்னார். வெளிநாட்டில் ஒன்றையும், இங்கு வேறொன்றையும் கூறுகின்றார்.

பொன்சேகா போரை முடிக்கப் பங்களிப்புச் செய்தவர். அதனால்தான் அவர் மனம் நோகும்படி நாம் கருத்துகளை முன்வைப்பதில்லை. ஆனால் அவர் (பொன்சேகா) தற்போது முழுநேர அரசியல் வாதி.

அன்று வெள்ளைக்கொடிக் கதையை அவர் கூறாமல் இருந்திருந்தால் நல்லது. இவ்வாறு வெள்ளைக்கொடிக் கதையைக் கூறாது, இன்று கூறும் (போர்நிறுத்தம்) கதையைக் கூறி இருந்தால் படையினருக்கு எதிராகப் போர்க்குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டிருக்காது. வெள்ளைக்கொடிக் கதையைக் கூறியதால்தான் போர்க்குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்றது - என்றார். (எ-44)

## உடைமையில் 11 கிராம் 'ஐஸ்'; குற்றவாளிக்கு ஆயுள் தண்டனை

மன்னார், செப்.6

மன்னார் பிரதேசத்தில் 2023 ஆம் ஆண்டு காலப் பகுதியில் 11 கிராம் ஐஸ் போதைப்பொருளை உண்டமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட ஒருவருக்கு வழக்கு விசாரணையின் பின்னர் ஆயுள் தண்டனை வழங்கி மன்னார் மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. குறித்த வழக்கு நேற்று எடுத்துக்கொள்ளப்பட்ட நிலையில் குற்றத்தின் பாரதூரத்தன்மை சந்தேகத்துக்கு அப்பால் நிரூபிக்கப்பட்டதன் அடிப்படையில் குற்றவாளிக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. (ச-213.56)



## எம்.பி.க்களுக்கு வழங்கப்பட்ட

# 'வியத்புர' வீட்டுத்திட்டத்தின் சலுகைகளை நீக்க அனுமதி

கொழும்பு, செப்.6

'வியத்புர' வீட்டுத்திட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வீடுகளைக் கொள்வனவு செய்யும்போது வழங்கப்பட்ட சலுகைகளை நீக்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

2022ஆம் ஆண்டு நாட்டில் இடம்பெற்ற குழப்பகரமான சூழ்நிலையால் வீடுகளை இழந்த அப்போதைய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு நகர அபிவிருத்தி அதிகாரசபையால் 'வியத்புர' வீட்டுத்தொகுதி நிர்மாணிக்கப்பட்டது. அங்குள்ள 101 வீட்டு அல[illegible] பட[illegible] 2022 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 4ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப் பட்டது.

இந்தச் சலுகை முறையால் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு 92.126 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதுடன், செலவை ஈடுசெய்யமுடியாது போயுள்ளது. இந்தநிலையில் இந்தச் சலுகை முறையை உடனடியாக நடைமுறைக்கு வரும்வகையில் இரத்துச்செய்வதற்கு நகர அபிவிருத்தி, கட்டுமானம் மற்றும் வீடமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோச[illegible] அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. (எ-இ)

## ரூ. 10 கோடி பெறுமதியான போதைப்பொருளுடன் இந்தியர் கைது

கொழும்பு, செப்.6

10 கோடியே 50 இலட்சம் ரூபா பெறுமதியான குஷ் போதைப் பொருளுடன் இந்தியப் பிரஜை ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து விமான நிலையச் சுங்க அதிகாரிகளால் நேற்று வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் தாய்லாந்தின் பாங்கொக் நகரத்தில் கொள்வனவுசெய்து பின்னர் இந்தியாவின் புதுடில்லியிருந்து நேற்று கட்டுநாயக்க விமானநிலையத்தை வந்தடைந்துள்ளார்.

அவரது பயணப்பொதிகளில் இருந்து 10 கிலோ 750 கிராம் குஷ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்குக் கட்டுப்பாடுகளை யாழில் இறுக்கத் திட்டம்!



யாழ்ப்பாணம், செப். 6

**யாழ்ப்பாணம் மாவட்டத்தில் டெங்குக் கட்டுப்பாட்டுத் திட்டங்களை இறுக்கமாகப் பின்பற்றுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

யாழ்ப்பாணம் மாவட்ட டெங்குக் கட்டுப்பாடு தொடர்பான கூட்டம் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில், மேலதிக மாவட்டச் செயலர் கை.சிவகரன் தலைமையில் நேற்று நடைபெற்றது. இதன்போதே, மாவட்டத்தில் டெங்குக் கட்டுப்பாட்டுத் திட்டங்களை இறுக்கமாகக் கடைப்பிடிப்பது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்படி இந்த மாதம் 8ஆம் திகதி தொடக்கம் 12ஆம் திகதி வரை பிரதேசங்கள்தோறும் டெங்குக் கட்டுப்பாட்டுக் கூட்டங்களையும், கிராம அலுவலர் தலைமையில் கிராமங்கள்தோறும் டெங்குக் கட்டுப்பாட்டுக் கூட்டங்களையும் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அத்துடன் டெங்குக் கட்டுப்பாட்டு வாரத்தை எதிர்வரும் 14ஆம் திகதிமுதல் நடத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. இதன்படி, எதிர்வரும் 14ஆம் திகதி வணக்கஸ்தலங்களிலும் 15ஆம் திகதி அரச அலுவலகங்களிலும், 16ஆம் மற்றும் 17ஆம் திகதிகளில் பாடசாலைகளிலும் தூய்மைப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன. அத்துடன், எதிர்வரும் 22ஆம் திகதி தொடக்கம் 24ஆம் திகதி வரை வீடுகள்தோறும் சிரமதானப் பணிகளை மேற்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ம-66)

## வரி செலுத்துதல் இனி இ-சேவை

கொழும்பு,செப்.6

செப்ரெம்பர் முதலாம் திகதி முதல் தற்காலிக மற்றும் நிரந்தர பெறுமதிசேர் வரிப் பதிவுக்கான அனைத்து விண்ணப்பங்களும் அதன் இணையவழி 'இ -சேவைகள் தளம் வழியாக மட்டுமே சமர்ப்பிக்கப்படவேண்டும் என்று உள்நாட்டு இறைவரித் திணைக்களம் அறிவித்துள்ளது.

நேரடியாகச் சமர்ப்பிக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. வற் பதிவை நாடும் எந்தவொரு தனிநபர் அல்லது வணிகமும் இந்த நடைமுறையை டிஜிற்றல் முறையில் பூர்த்திசெய்யவேண்டும்.

வரி செலுத்துவோர் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தை அணுகலாம் அல்லது 1944 என்ற இலக்கத்தின் ஊடாக அழைப்பு நிலையத்தைத் தொடர்புகொள்ளலாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ச-இ)



## மின்சாரசபை ஊழியர்கள் தொழிற்சங்கப் போராட்டம்

கொழும்பு,செப்.6

இலங்கை மின்சாரசபையின் அனைத்துத் தொழிற்சங்கங்களும் ஒருதலைப்பட்சமான மறுசீரமைப்புத் திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து, நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் நாடுமுழுவதும் பணிக்கு விதிக்கப்பட்ட வரம்புக்குட்பட்ட தொழிற்சங்க நடவடிக்கையைத் தொடங்கியுள்ளனர்.

இந்த விவகாரத்துக்கு அரசாங்கம் சரியான தீர்வை வழங்கத் தவறினால், வேலைநிறுத்தமாக இந்த நடவடிக்கை தீவிரப்படுத்தப்படும் என்றும் மின்சாரசபைத் தொழிலாளர்கள் சங்கம் எச்சரித்துள்ளது. இலங்கை மின்சாரசபையை மறுசீரமைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்தல் உள்ளிட்ட 24 கோரிக்கைகளை முன்னிறுத்தி இந்த எதிர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## மாணவி துஷ்பிரயோகம்; சந்தேகநபருக்கு மறியல்

கொழும்பு,செப்.6

பாடசாலை மாணவி ஒருவரைப் பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் சந்தேகநபர் பேலியகொடை பொலிஸ் சிறுவர் மற்றும் பெண்கள் பணியகத்தினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டவர் பேலியகொடைப் பிரதேசத்தில் வசிக்கும் 30 வயதுடைய திருமணமானவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரைநீதிமன்றில்முற்படுத்திய போது 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது. (ச-இ)



## தெங்கு செய்கைக்கு காப்புறுதித் திட்டம்

கொழும்பு,செப்.6

தெங்குச் செய்கையாளர்களுக்காகப் புதிய காப்புறுதித் திட்டத்தை விவசாய மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை அறிமுகப்படுத்தியுள்ளது.

புதிய உற்பத்தி, மீள் உற்பத்தி, உப உற்பத்தி போன்ற மானிய முறைகளின்மூலம் வழங்கப்படும் தென்னை விதையை 5 வருடங்கள் தொடர்ச்சியாக மேற்பார்வை செய்து பாதுகாக்கும் விதமாக இந்தத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தக் காப்புறுதிக் காலம் 15ஆவது நாளில் இருந்து ஒரு வருடம்வரை நடைமுறைப்படுத்தப்படும்.

காப்புறுதித் தவணைக் கட்டணமாக ஒரு தென்னை மரத்துக்காக 67.50 ரூபா என்பதுடன் மொத்தக் காப்புறுதி 550 ரூபாவாக வழங்கப்படும். தெங்குப் பயிர்ச்செய்கை சபை, விவசாய மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை ஆகியவற்றின் ஒன்றிணைந்த திட்டமாக இது அமைந்துள்ளது. (ச-இ)




## வலையைத் தின்னும் கப்பல்


அசைந்து தின்னுமாம் யானை, அசையாமல் தின்னுமாம் வீடு என்டொரு பழமொழி இருக்கு. உந்தப் பழமொழியைக் கொஞ்சம் மாத்தி "அசைந்து அறுப்பினமாம் அடாத்துக்காரர், அசையாமல் அறுத்தெடுக்குதாம் சொகுசுக்கப்பல்" என்டு வலி.வடக்கில இருக்கிற மீன்பிடிகாரர் கவலையோட சொல்லுகினம். இந்தியாவிலயிருந்து அடாத்தா உள்ளுக்க வந்து மீன்பிடிக்க தமிழக மீன்பிடிக்காரர் கொண்டு வாற பெரிய றோலர்கள், இஞ்சத்த மீனவர்கள் கடலில போட்டிருக்கிற வலையெல்லாத்தையும் அறுத்துத் தள்ளிக்கொண்டு போடும். இவ்வளவுகாலமும் தமிழக மீனவர்மார் மீனையும் அள்ளிக்கொண்டு, வலைகளையும் அறுத்து எங்கட மீனவர்மாரின்ர வயித்தில அடிச்சினம். இப்ப இவைக்குத் துணையா சொகுசுக்கப்பலும் வந்திருக்காம். அதுதான் இப்ப எங்கட மீன்பிடிகாரரின்ர பிரச்சினை.

இந்தியாவில இருந்து வெளிக்கிடுற சொகுசுக்கப்பல், ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் காங்கேசன் துறைக்கு வாறது வழக்கம். அதில வாறவை கொஞ்சநேரம் கரையில இறங்கி இஞ்சையுள்ள இடங்கள் சிலதைப் பார்த்திட்டு, நல்லூரையும் கும்பிட்டிட்டுத் திரும்ப கப்பலில ஏறி வெளிக்கிடுவினம். இப்பிடி சொகுசுக்கப்பல் எங்கட இடத்துக்கு வாறதும், சுற்றுலாப் பயணிகள் அந்தக் கப்பலில வந்து எங்கட இடங்களைப் பார்த்து, தங்களுக்குத் தேவையான சாமான்களை வேண்டிக்கொண்டு போறதும் பொருளாதார விசயத்தில நல்லதுதான். யாழ்ப்பாணத்தைப் பற்றி அவை போய் மற்றவைக்கு நல்லமாதிரிச் சொல்ல, இன்னும் கனபேர் வெளிக்கிட்டு வருவினம். இஞ்ச நல்ல காசும் புழங்கும். இப்பிடியெல்லாம் ஒருபக்கம் பெரும் நன்மை இருந்தாலும், இப்ப இந்தச் சொகுசுக்கப்பல் கண்ணைமூடிக்கொண்டு வாறதால வலி.வடக்கு மீனவர்மாரின்ர வலையள் அடிக்கடி அறுபடுகுது. வலி.வடக்கு மீனவர்மார் வலைபோட்டிருக்கிற வழியாலதான் கப்பலும் வருகுது. அப்பிடி வாற கப்பலுக்கு எங்க வலை இருக்கு எண்டது தெரியாதுதானே. அதால கப்பல் ஆடியசைஞ்சுகொண்டு வரேக்க, கடலுக்க படுத்திருக்கிற வலையள் அந்தக் கப்பலில சிக்கிச் சின்னாபின்னமாப் போகுது.

ஒருவலையின்ர பெறுமதி கிட்டத்தட்ட 18 ஆயிரம் ரூபா. இந்தரண்டுமாதத்தில மட்டும் சொகுசுக்கப்பலில மாட்டுப்பட்டு 25 வலையள் அறுபட்டிருக்குதாம். அஞ்சுக்கும், பத்துக்கும் அல்லாடுற மீனவர்கள் இப்பிடி வலை அறுபடுறதால ஒரு செக்கனில ஆயிரக் கணக்கில இழந்தால், எப்பிடி அவை தொடர்ந்து தொழில் செய்யேலும்? அதுக்காக இஞ்ச வாற கப்பலையும் நிப்பாட்ட ஏலாது. அப்ப என்ன வழி? ஒண்டு கப்பல் வாற பாதையில வலை படுக்கிறதை மீனவர் நிப்பாட்டவேணும். ஆனால் அதுக்கும் சாத்தியமில்லை. எங்க மீன்பாடுகூட இருக்கோ அங்கதான் வலை படுக்கமுடியும். அதால வலையள் படுக்கிற இடத்தை ஏதும் கலர் மிதவையாளால அடையாளப் படுத்தினால், அதுக்கேத்தபடி எந்தப் பாதையால கப்பல் வரோணும் எண்டு நேவிக்காரர் வழிகாட்டலாம். இப்ப நேவிக்காரரும் சும்மாதானே இருக்கினம். இப்பிடி வழிகாட்டிற வேலையைச் செய்தால் கப்பலும் வந்துபோகலாம், வலையளையும் காப்பத்தலாம் கண்டியளோ.

padsi@uthayan.com
- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்

(ராசிபலன்)

**மேடம்:** முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்ப்பது நல்லது. மனதில் தேவையற்ற குழப்பம் ஏற்பட்டு நீங்கும். வாகனத்தில் செல்லும்போது கவனமாகச் செல்லவும். உறவினர்கள்வகையில் தேவையற்ற பிரச்சினை ஏற்படக்கூடும் என்பதால் பொறுமை அவசியம்.

**இடபம்:** தேவையான பணம் கிடைக்கும். உறவினர்கள் சிலர் உங்கள் யோசனைகேட்டு வருவார்கள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தருவதாக இருப்பதுடன், ஆதாயம் தருவதாகவும் அமையும்.

**மிதுனம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். ஆனால்,குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவுகள் எதையும் எடுக்கவேண்டாம். உறவினர்களுடன் மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு இருப்பதால் அவர்களிடம் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கடகம்:** சகோதரவகையில் எதிர்பார்த்த காரியம் சாதகமாகமுடியும். சிலருக்கு வீண்செலவுகள் ஏற்படக்கூடும். குலதெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றும் சந்தர்ப்பம் கூடிவரும். கணவன் மனைவிக்கிடையே சிறுசிறு விவாதங்கள் ஏற்படும். பொறுமை அவசியம்.

**சிம்மம்:** உற்சாகமான நாள். குடும்பத்தில் சிறுசிறு சலசலப்பு ஏற்பட்டாலும், சமயோசிதமாக சமாளித்து விடுவீர்கள். தேவையான பணம் கையில் இருந்தாலும் எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

**கன்னி:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். தொடங்கும் காரியம் அனுகூலமாக முடியும். உங்களுடைய முயற்சிகளுக்கு குடும்பத்தினரின் ஆதரவு கிடைக்கும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**துலாம்:** புதிய முயற்சிகளைப்பிற்பகலுக்குமேல் தொடங்குவது சாதகமாகமுடியும். எதிரிகளால் மறைமுக ஆதாயம் உண்டாகும். சகோதர வகையில் எதிர்பார்த்த காரியம் இழுபறிக்குப் பிறகுதான்முடியும்.


**விருச்சிகம்:** காலையில் வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவைப்படும். பிள்ளைகளால் செலவுகள் ஏற்படக்கூடும். சிலருக்கு வயிறு தொடர்பான பிரச்சினை ஏற்படக்கூடும் என்பதால், உணவு விஷயத்தில் கவனம் தேவை.

**தனுசு:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். தாயின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். தாய்வழி உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். குடும்பத்துடன் கோயிலுக்குச் சென்று பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள்.

**மகரம்:** எதிர்பார்த்த பணம் கைக்குக் கிடைக்கும். வீட்டில் உள்ளவர்கள் உங்கள் ஆலோசனையைக் கேட்டுச் செயற்படுவார்கள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**கும்பம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவைப்ப்டும். அரசாங்க வகையில் எதிர்பார்த்த காரியம் முடிவதில் தடைகளும் தாமதமும் ஏற்படக்கூடும்.

**மீனம்:** சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கும் வாய்ப்பு ஏற்படக்கூடும். அலுவலகத்தில் உங்கள் பணிகளை மற்றவர்களிடம் ஒப்படைக்காமல் நீங்களே செய்வது அவசியம். எதிர்பார்த்த பணவரவு உண்டாகும்.





கிளிநொச்சி மாவட்டத்தின் இராமநாதபுரம் புதுக்காடு திருவருள்மிகு பூர்ணா புஷ்பகலா சமேத ஐயனார் ஆலய வருடாந்தத் தேர்த்திருவிழா கடந்த புதன்கிழமை சிறப்பாக நடைபெற்றது. இதன்போது கதகளி ஆட்டம், பரத நாட்டியம், யானை ஊர்வலம் மற்றும் இந்தியாவின் கேரளா மாநிலத்தின் பிரபல்யமான கலைகளில் ஒன்றான சண்டிமேள வாத்தியம் போன்ற பல்வேறு வகையான நிகழ்வுகளும் நடைபெற்றன. (ச-25,113)

## விசேட உதவிகளுக்கு பதிவுசெய்யுங்கள்

யாழ்ப்பாணம், செப். 6

தென்னம்பிள்ளைகள், மலசலகூடம், விசேட தேவை உடையோருக்கான உபகரணங்கள் போன்றவற்றின் தேவைப்பாடுகளுடையவர்கள் தத்தமது பிரிவு கிராம அலுவலர் அலுவலகத்தில் பதிவு செய்யுமாறு தென்மராட்சி பிரதேச சமூக சேவைகள் அலகினால் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-25,9)

## ‘சுதர்ஷன் கிரியா’ மூச்சுப்பயிற்சி

யாழ்ப்பாணம், செப். 6

‘வாழும் கலை’ எனும் தொனிப்பொருளில் ஆனந்த அனுபவப் பயிற்சியான ‘சுதர்ஷன் கிரியா’ மூச்சுப்பயிற்சி குருதேவ் ஸ்ரீ ரவிசங்கரினால் வழங்கப்படவுள்ளது.

நல்லூர் சிவகுரு ஆதீனத்தில் இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் மாலை 5 மணி தொடக்கம் இரவு 8 மணி வரை பயிற்சி இடம்பெறும்.

பதிவுகளை மேற்கொள்ள 0771000750, 0778645971 ஆகிய தொலைபேசி இலக்கங்களுக்கு அழைப்பை ஏற்படுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-25)



வடக்கு மாகாணக் கடற்படைத் தளபதியாக பதவியேற்றுள்ள ரியர் அட்மிரல் புடிக்ஹ லியனகமகே, வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகனை ஆளுநர் செயலகத்தில் நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடினார். (ச-27,66)





வரலாற்றுச் சிறப்புமிக்க பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலய ஆவணி மஹோற்சவத் திருவிழாவின் சப்பறத் திருவிழா கடந்த திங்கட்கிழமை இரவு பக்திபூர்வமாக இடம்பெற்றது. (ச-41-66)

## மஹோற்சவம்

யாழ்ப்பாணம், செப். 6

கோப்பாய் வடக்கு கொழுவியம்பதி ஸ்ரீ சக்கராழ்வார் ஆலய வருடாந்த மஹோற்சவம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

தொடர்ந்து 11 நாள்கள் நடைபெறும் உற்சவத்தில் எதிர்வரும் 13 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்குத் தேர்த்திருவிழாவும் அன்றையதினம் மாலை 6 மணிக்கு உறியடி உற்சவமும், அடுத்தநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்குத் தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (ச-25, 17)

## ‘உறவு’ திரைப்படம் இலவச திரையிடல்

யாழ்ப்பாணம், செப். 6

கனடாவில் வசிக்கும் திவ்வியராஜனின் தயாரிப்பிலும் நெறியாள்கையிலும் உருவாக்கப்பட்ட ‘உறவு’ எனும் தமிழ்த் திரைப்படம் திரையிடப்படவுள்ளது.

அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள எங்கட புத்தகங்கள் இல்லத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு இந்தத் திரையிடல் இடம்பெறும். கனடாவில் வாழும் எம்மவர் சிலரின் வாழ்க்கைப் பிரச்சினைகளை சித்தரிக்கும் வகையில் இந்தத் திரைப்படம் உருவாக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத் திரைப்படக் கழகத்தினால் இந்தக்காட்சி இலவசமாகக் காண்பிக்கப்படவுள்ளது. (ச-25)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



# பூக்களை வதைக்காதீர்...!

ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையின் பெறுபேறுகள் வெளிவந்திருக்கின்றன. மிகச் சாதாரண மான இந்தப் பரீட்சையை, வாழ்க்கையைத் தீர் மானிக்கப்போகும் பரீட்சை போன்று உருப் பெருக்கம் செய்து, மாணவர்கள் மத்தியில் ஏற்றத் தாழ்வை உருவாக்கும் நடவடிக்கைகள் 'ஜெட்' வேகத்தில் பாடசாலைகளாலும், தனியார் கல்வி நிறு வனங்களாலும் பல தசாப்தங்களாக முன்னெடுக் கப்பட்டுவருகின்றன. இதில் இப்போது சமூக வலைத்தளங்களின் வகிபங்கும் சேர்ந்துவிட்டது. ஐந்தாம் தர மாணவர்களுக்கு வெறும் பத்தே வய தான பிஞ்சுகளுக்கு இவ்வாறான 'அக்கினிப் பரீட்சை' தேவைதானா? என்று ஒரு பக்கத்தில் கல்வியிய லாளர்கள் சிந்திக்கையில், மறுமுனையில் இவ்வாறான தவறான முன்னுதாரணங்களும் இடம்பெறவே செய்கின்றன.

புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களுக்கு மாலைகள், மேடைகள், மணி மகுடங்கள் எனக் கொண்டாடித் தீர்க்கும் கலாசாரம் எம்மிடையே ஆழ ஊடுருவியுள்ளது. போதாததற்கு 'பனர்களும்' வைக்கத் தொடங்கியிருக்கின்றனர். ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சை கொண்டுவரப் பட்டதன் அடிப்படை நோக்கம், பரீட்சையில் சித்தி யடையும் ஏழை மாணவர்களுக்கு ஊக்கத்தொகை களை வழங்கி, அவர்களின் கல்விக்கு ஓர் உறுதுணையாக இருப்பது மட்டுமே. மற்றும்படி பிஞ்சுகளின் மனங்களில் சாதனையாளர்கள், தோல்வியடைந்த தரப்புகள் என்ற பாகுபாடுகளை விதைப்பதற்காக இந்தப் பரீட்சை ஏற்படுத்தப்படவில்லை. ஆனால், எத்தகைய நோக்கத்துக்காக புலமைப் பரிசில் பரீட்சை உருவாக்கப்பட்டதோ, அந்த நோக்கத்தில் இருந்து எமது கல்விக் கட்டமைப்பு தற்போது முற்றி லும் வழிதவறியுள்ளது என்பதே உண்மை. இந்தப் பாகு பாடான கொண்டாட்டங்களால், வெற்றி தோல்வி தொடர்பான அறிவிப்புகளால் மாணவர்கள் எதிர் கொள்ளும் உளவியல் நெருக்கடி பெரியது. அத்தகைய நெருக்கடியைக் கொடுக்கும் பரீட்சை களால் ' கல்விச் சமூகத்தால் ' புரிதலற்ற பெற்றோரால் - சமூக வலைத் தளப் பயநர்களால் ஒருபோதும் ஆரோக்கியமானதும் கற்றறிந்ததுமான மாண வர்களை உருவாக்கமுடியாது. 'பத்து வயதுக் குழந்தை வெற்றியையும் தோல்வியையும் சமமாக எடுத்து, அடுத்தகட்டத்துக்கு நகர்ந்துசெல்லும் பக்குவம் அற்றது' என்பதே இங்கு விடயம். இந்தச் சிந்தனைப் புள்ளியை மையப்படுத்தியே, ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையும் அதை முன்னிட்ட அடுத்தகட்ட நகர்வுகளும் தீர்மானிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், நாங்களோ குழந்தைகளின் கல் வியில் ' அவர்களின் உளவியலில் 'ஆரோக்கியத்தில் - வாழ்வில் விஷப் பரீட்சைகளை நடத்தி விளையாடிக் கொண்டிருக்கின்றோம்.


நாட்டின் பிரதமரும் கல்வி அமைச்சருமான ஹரிணி, ஒட்டுமொத்த கல்விக் கட்டமைப்பையும் மறுசீரமை க்கப் போவதாகக் கூறியிருக்கின்றார். இந்த மறுசீரமைப் பின்போது, புலமைப் பரிசில் பரீட்சை நீக்கப்பட வாய்ப்பிருக்கின்றது. சிலவேளைகளில், வறிய மாண வர்களின் உதவித்திட்டத் தேவை களைக் கருதி அந்தப் பரீட்சையைத் தக்கவைக்கவும் தீர்மானிக்கலாம். அது வேறு விடயம். ஆயினும், பரீட்சையில் வெற்றிபெற்ற மாணவர்களையும் தோல்வியுற்ற மாணவர்களையும் பாகுபடுத்தி இடம்பெறும் இந்தக் கொண்டாட்டங்களை அவர் முற்றுமுழுதாக பாடசாலைகளில் இருந்தும், கல்வி நிறுவனங்களில் இருந்தும், சமூகக் கட்டமைப்பில் இருந்தும் துடைத்தெறியவேண்டும். பல்கலைக் கழகங்களில் மேற்கொள்ளப்படும் பகிடிவதையையும் விட கொடூரமான வதைக்கு, நாம் 'புலமைப்பரிசில் பரீட்சை' என்ற பெயரிட்டு சமூக அங்கீகாரத்தையும் கொடுத்துவைத்திருக்கின்றோம் என்பது மிகப் பெரும் அபத்தமே.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

நாளொரு நல்வார்த்தை

உறுதியைப் போல உழைப்பும் இருந்தால்
நீ வெற்றி காணுவாய்.

—ஷெல்லி—




# சிறுவரைப் பணியமர்த்துதல் அபராதத்தொகை அதிகரிப்பு



கொழும்பு,செப்.6

இலங்கையில்சிறுவர்தொழிலாளர்விதிமீறல்களுக் கான அபராதத்தொகையை அதிகரிக்க அமைச் சரவை அனுமதியளித்துள்ளது.

1956ஆம் ஆண்டு மகளிர், இளை ஞர்கள் மற்றும் சிறுவர் வேலை வாய்ப்புச் சட்டம் இல. 47 இல் உள்ள அபராதங்களைத் திருத்து வதற்கான முன்மொழிவுக்கு அமைச்சரவை அனுமதியளித்துள் ளது. இந்தச் சட்டம் 16 வயதுக்குட் பட்ட சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவதைத் தடைசெய்கிறது. மேலும், 16 முதல் 18 வயதுக்குட்பட் டவர்கள் உடல்நலம், பாதுகாப்பு அல்லது ஒழுக்கத்திற்கு அச்சுறுத் தல் ஏற்படுத்தும் அபாயகரமான தொழில்களில் ஈடுபடுவதைத் தடை செய்து, அவர்களின் வேலைகளை ஒழுங்குபடுத்துகிறது. தற்போது, இந்தச் சட்டத்தை மீறுப வர்களுக்கு அதிகபட்சமாக 10,000 ரூபா அபராதம் அல்லது 12 மாதங்கள் வரை சிறைத்தண்டனை அல்லது இரண்டும் விதிக்கப்படும். அத்துடன் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு நஷ்ட ஈடும் வழங்கவேண்டும். இந்த அப ராதத்தொகை போதுமானதாக இல்லை என்று தொழில் அமைச்சு தெரிவித்துள்ளது. எனவே, இலங்கை அங்கீகரித்துள்ள சர்வ தேச தொழிலாளர் அமைப்பின் 138 மற்றும் 182ஆவது மாநாடுக ளுக்கு இணங்க அபராதங்களை அதிகரிப்பதற்குத் தீர்மானிக்கப்பட் டுள்ளது. (ச-இ)

# கையிருப்பு அதிகரிப்பு

கொழும்பு,செப்.6

இலங்கையின் உத்தியோ கபூர்வக் கையிருப்பு சொத்துகள் 2025 ஜூலை யில் 6.147 பில்லியனிலி ருந்து 0.3 வீதமாக அதிக ரித்துள்ளது. இதன்படி கடந்த ஓகஸ்டில் 6.166 பில்லியன் அமெரிக்க டொலராக அதிகரித்துள்ள தாக மத்திய வங்கியின் தரவுகள் தெரிவித்துள் ளன. (ச-இ)



# 5 நாள்களில் போதைப்பொருள்களுடன் 3,027 பேர் கைது

கொழும்பு, செப்.6

பொலிஸ்மா அதிபரின் அறிவுறுத்தலின் பேரில் நாட ளாவிய ரீதியில் கடந்த 5 நாள்களில் மேற்கொள்ளப் பட்ட விசேட சுற்றிவளைப்பில் போதைப்பொருள்களு டன் 3 ஆயிரத்து 27 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. அதேவேளை 48 ஆயிரத்து 925 கஞ்சா செடிகளு டன் 29 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# சுவிஸ் மாநாட்டுக்குக் கஜேந்திரகுமாருக்கு அழைப்பு

கொழும்பு, செப்.6

இலங்கை சுவிட்ஸர்லாந்து நட்புறவுச் சங்கத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் 14ஆம் திகதி சுவிட்ஸர்லாந் தில் நடக்கவுள்ள மாநாட்டுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்கு இலங்கைக்கான சுவிட்ஸர்லாந்து தூதரகம் அழைப்புவிடுத்துள்ளது.

இலங்கை சுவிட்ஸர்லாந்து உறவின் 70ஆவது நிறைவை முன்னிட்டு இந்த மாநாடு ஏற்பாடு செய் யப்பட்டுள்ளது. இலங்கையில் புதிய அரசமைப்பு மாற்றம் நிகழவுள்ளநிலையில் இலங்கை அரசி யல்வாதிகள் சுவிஸ் அரசியல் அமைப்புப் பற்றிய ஆழமான, நேரடி நுண்ணறிவுகளைப் பெறவும், அர்த்தமுள்ள பரிமாற்றங்களில் ஈடுபடவும் இது ஒரு வாய்ப்பை வழங்கும் என தூதரகம் விடுத்துள்ள அழைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த மாநாட்டுக்கு இலங்கையில் இருந்து அழைக்கப்பட்டுள்ள ஒரேயொரு தமிழ் நாடாளு மன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்ப லம் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-27)

# மூதாட்டி கொடூரக்கொலை

மாத்தறை, செப்.6

மாத்தறையில் ஹக்மனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பதுவத்த பிரதேசத்தில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு மூதாட்டி ஒருவர் நேற்றுமுன்தினம் கொலைசெய்யப்பட்டுள்ளார் என்று ஹக்மனை பொலிஸார் தெரிவித்தனர். ஹக்மனை, பதுவத்த பிரதேசத்தைச் சேர்ந்த 74 வயதுடைய மூதாட்டி ஒருவரே கொலைசெய்யப்பட்டுள்ளார். (ச-இ)

நாளை
ஞாயிற்றுக்கிழமை- ஆவணி 22
07.09.2025
சுபநேரம் : 03.04 - 04.34
ராகுகாலம் : 09.04 - 10.34

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னதானக் கந்தன் தேரேறி வருகிறான்





மதுரகவி காரை. எம்.பி. அருளாந்தன்

ஈழமணித் திருநாட்டின் தென்பால் கதிர்காமக் கந்தனுடைய ஆலயம் விளங்குவது போல் வடபால் செல்வச் சந்நிதி ஆலயம் விளங்குகிறது. அன்னதானக் கந்தனாகத் தொண்டைமானாறு ஆற்றங்கரையினிலே அருளாட்சி செய்துவருகின்ற சந்நிதிக் கந்தனுக்கு இன்று சனிக்கிழமை தேர்த்திருவிழாவாகும்.

### முருக பக்தர்கள் செல்வச்சந்நிதியில் கூடும் கண்கொள்ளாக்காட்சி

இன்றைய தேர்த்திருவிழாவிலே ஈழத்தின் பல பாகங்களிலிருந்தும் வேறுநாடுகளிலிருந்தும் பல்லாயிரக்கணக்கான முருக பக்தர்கள் செல்வச்சந்தியில் கூடுகின்ற கண்கொள்ளாக்காட்சியைக் காணமுடிகின்றது. கதிர்காமத்தில் காவடிக் கந்தனாகவும், மாவிட்டபுரத்தில் அபிஷேகக் கந்தனாகவும், நல்லூரில் அலங்காரக் கந்தனாகவும் அருள்பாலித்துக்கொண்டிருக்கின்ற முருகப்பெருமான் செல்வச்சந்நிதியில் அன்னதானக் கந்தனாக ஆற்றங்கரையில் வீற்றிருந்து அருள்பாலித்தக்கொண்டிருக்கின்றான்.

### கருணாகரத் தொண்டமான் எனும் சிற்றரசருடன் தொடர்பு பூண்ட நகரம்

வட இலங்கையில் வடமராட்சிப் பகுதியில் தொண்டைமானாறு எனும் புராதன நகரம் உண்டு, கருணாகரத் தொண்டமான் எனும் சிற்றரசருடன் தொடர்புபூண்ட நகரம் இந்தப் பெயரால் வழங்கப்பட்டு வருகின்றது. தொண்டைமான் ஆற்றங்கரையில் கழிமுகத்துக்கு அண்மையில் அமைந்துள்ளது.

### 'சின்னக்கதிர்காமம்'

செல்வச்சந்நிதி ஆலயம் சின்னக் கதிர்காமம், செல்லக் கதிர்காமம், கல்லோடை எனும் சிறப்புப் பெயர்களால் அழைக்கப்பட்டுவருகின்றது. கோயில் சூழலில் இயற்கை அழகு எல்லோரையும் ஈர்ப்பது மருதமரக்காடும், பாக்கு நீரிணைக்கடலும் மருங்கே காணும் வயலும் இடையே கிழக்கே இருக்கும் வல்லை வெளியும் திணை ஒழுக்கம் காட்டும்

### கதிர்காமமும் செல்வச்சந்நிதியும்

செல்வச் சந்நிதியில் அந்தணர் அல்லாதோர் பூசை நடத்துகின்றனர். இந்த ஆலயத்தில் நடைபெறும் வழிபாட்டுக்கும் கதிர்காமத்தில் நடைபெறும் வழிபாட்டுக்கும் நெருங்கிய ஒற்றுமை உண்டு. இரு ஆலயங்களில் வேதாகம முறையிலான வழிபாடு இல்லை. பூசையில் மந்திரங்கள் இடம்பெறுவதில்லை. வேறு எந்நக் கோயிலிலும் காணப்படாத சடங்குமுறையே சந்நிதியில் காணப்படுகின்றது. கதிர்காமத்துக் கொடியேற்ற நாளில் சந்நிதி முருகன் கதிர்காமம் செல்வதாகவும் பின்னர் திரும்பிவருவதாகவும் சடங்குகள் செய்யப்படுகின்றன.

### கதிர்காமரும் முருகனும்

ஒரு நாள் இரவு முருகன் பூசாரியார் கதிர்காமரை நித்திரையிலிருந்து எழுப்பி "அப்பா" நான் பாதயாத்திரையாக வந்தமையால் பசி தாகம் அதிகரித்துள்ளது. ஏதும் உண்பதற்குக் கொடும் என்று கேட்டாராம். கதிர்காமரும் நான் தங்களுக்கு அமுது படைக்க இவ்வேளை எங்கு போவேன்? என்று மனம் நொந்தார். உன்னிடம் இருக்கும் சிறிதளவான பயற்றைத் துவைத்து இளநீரும் தா என்று கேட்டுவாங்கி முருகன் திருவமுது செய்தார்.

### பயற்றம் உருண்டையும் இளநீரும்

இன்றும் அவ்விதமாக பயற்றம் உருண்டையும் இளநீரும் கதிர்காமத்திலிருந்து திரும்பிவருகின்ற முருகனுக்கு பூசைக்கு படையல் செய்துவருவது நடைமுறையில் உள்ளது.

### வேல்

செல்வச்சந்நிதிச் சூழலிலே காணப்பட்ட மடங்கள் சில சிதைந்த நிலையிலே இருக்கின்றன. அந்தக் காலங்களிலே அம்மடங்களிலே அடியார்கள் தங்கவும், அன்னதானம் நிறைவேற்றவும் வசதியாக அமைந்தன. இன்றும் சந்நதியான் ஆச்சிரமம், ஆனந்தா ஆச்சிரமம் போன்ற ஏனைய மடங்களும் அப்பணியை நிறைவேற்றிவருகின்றன. சந்நிதிப் பூசை நேரங்களிலில் ஒலிக்கும் பறை மேளம் அன்பர்களைப் பரவசப்படுத்தும் நிறைந்த கற்பூர ஒளியிலும், செறிந்த புகை மண்டல நடுவிலே மின்னல் போல ஒளிரும் வேலின் தோற்றம் கண்டு பரவசப் படாதார் எவருமில்லையென்றே கூறலாம். சந்நிதி மூலஸ்தானத்தில் வேல் காட்சியளித்து எம்மை ஆட்சிசெய்கின்றது வேலை வணங்குவதே எமக்கு வேலை




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## நான்கு தசாப்தங்கள் உருண்டோடி விட்டதே சந்நிதியானே...

ஓம் எனும் பிரவணப் பொருளின் அதிபதியே...!
தஞ்சமென வரும் அடியவருக்குக் கொஞ்சும்
எழில் காட்டும் கோல மயில் வாகனனே...!!
விண்ணுலகம் மண்ணுலகம் போற்றும் மூத்த குடி முதல்வனே...!!!
சுட்ட பழம் சுடாத பழம் ஔவைக்கே பாடம் வகுத்த குமரனே...!
பற்பல நேர்த்திக்காய் அடியவர் கூட்டம் உன் சந்நிதியிலே...!!
அடியவர்கள் வடம் பிடிக்க அல்லல் தீர்க்க தேர் ஏறி
வருகின்றான் எம் வள்ளி நாயகன்...!!!

1984ஆம் ஆண்டு உன் அடியார்களின் நிதிப்பங்களிப்பில்
உலகமே வியந்து பார்க்கும் பிரமாண்டமான சித்திரத் தேர் வடிவமைத்து.
1985 ஆம் ஆண்டு உந்தன் தேர் வடம் பிடித்து
நோய் போக்க பக்தர் கூட்டம் அலைமோத,
உன் நாமத்தை அழிக்க இலங்கை இராணுவம்
1986 ஆம் ஆண்டு உன்னையும், உன் அடியார்களையும்
சஞ்சலத்தில் ஆழ்த்தும் விதமாக உன் தேரினை எரியூட்டினர்,
இற்றைக்கு நான்கு தசாப்தங்கள்
உருண்டோடி விட்டதே எம் ஐயனே சந்நிதியானே...



**த. பிருந்தன்**
சந்நிதி கோவிலடி,
தொண்டைமானாறு.

## ஐந்து பரி பூட்டிய சித்திரத்தேரில் சிவகுமரன்...

அட்ட திசையாவும்
தொட்டு வடம் பிடிக்க
கெட்ட வினையெல்லாம் சுட்டெரிக்க
சுட்ட பழம் தந்த சுப்ரமணியன்
தேர் ஏறி வருகின்றான்.
சித்திரத்தேர் ஏறி வருகின்றான்...

**க. கதிர்சன்**
*சந்நிதி கோவிலடி,*
*தொண்டைமானாறு.*



சந்நிதி முருகன் திருவருள் உலகெங்கும்பரவ அவன்தாழ் பணிந்திடுவோம்
SRI MURUGAN
Communication Agency Post Office
WESTERN UNION MONEY TRANSFER
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு
துரித தபால்கள், பொதிகள் சேவை.
Western Union மூலம் அனுப்பிய
பணத்தைபெற நீண்ட கால அனுபவமும்,
அதிவிரைவு சேவையுடன் கூடிய நம்பகமாக
பாதுகாப்பான சேவைகள், இவை
அனைத்தையும் ஒரே கூரையின் கீழ்
பெற்றிட நாடுங்கள்.
Ria | MMBL Money Master | MoneyGram
DHL | aramex | Development Lottery Enriching Your Life | Dialog
No.303, K.K.S.Road, Jaffna, Srilanka.
Tel:0094 21 222 2690/5392
Fax:0094 21 222 3214
Email:Srimurugan09@gmail.com, srimurugan303@gmail.com

சந்நிதி முருகன் திருவருள் உலகெங்கும்பரவ அவன்தாழ் பணிந்திடுவோம்
கஜமுகன் ஹாட்வெயார்
KAJAMUGAN HARDWARE
Hardware Merchants, Importers of Building Materials,
Tokyo Super Cement, Nippon Cement, Paints




Paint Distributors
Suriyalack-Dulux




Tel:021 222 2833
021 222 7144
Fax:021 222 2368
இல.147,149, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
No.147,149,Stanley Road, Jaffna.

சந்நிதியான் திருவிழா சிறப்புற பிரார்த்திப்போம்



A1 Rajah
SINCE 1973
CREAM HOUSE






A1 RAJAH CREAM HOUSE
#37, Sir Pon Ramanathan Road, Jaffna. 021 221 6085 / 077 923 4176

பல வருடங்களாக சிறந்த சேவையினை வழங்கிவரும்
பிரகாஸ் ரான்ஸ்போட்
& ஏஜன்சி (Pvt)Ltd rio cock
போக்குவரத்துச் சேவை
கொழும்பு - யாழ்ப்பாணம் - கொழும்பு
எமது யாழ். கிளை
மூலமாகக் குடாநாட்டில்
உற்பத்தியாகும் அனைத்து
பொருட்களையும் தென்
பகுதியில் உரிய இடங்
களில் ஒப்படைக்கவும்
கொழும்பிலிருந்து
அனைத்து வர்த்தகப்
பொருட்களையும்
வடபகுதியிலிருந்து
வர்த்தகர்களிடம்
ஒப்படைக்கவும் நம்பிக்கையுடன்
சேவை செய்யும் எங்கள் நிறுவனத்திற்கு
தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்குமாறு
வாடிக்கையாளர்களை
அன்புடன் அழைக்கின்றோம்.
சந்நிதியான்
திருவிழா
சிறப்புற
பிரார்த்திப்போம்




MRF, MICHELIN,
KUMHO, HIYDA,
ALLIANCE
ஆகியவற்றின்
அங்கீகரிக்கப்பட்ட
யாழ். முகவர்
457, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
Hotline: 021 222 2145
077 538 9987 / 021 222 2958
No.195, Dam Street, Colombo-12
T.P: 011 254 3922
Fax:011 254 3921

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு 10 . 06 . 1943



இறப்பு 05 . 09 . 2025

## ஜெயராசா ராஜேஸ்வரி

சிவலிங்கப்புளியடியை பிறப்பிடமாகவும் வன்னியசிங்கம் வீதி, கோண்டாவில் கிழக்கு கோண்டாவிலை வதிவிடமாகவும் கொண்ட ஜெயராசா ராஜேஸ்வரி நேற்று (05.09.2025) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் ஜெயராசாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான தனபாலசிங்கம், மனோபாலசிங்கம், வரலக்ஸ்மி மற்றும் செல்வராணி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், தர்மவரதன் சுஜாதா (லண்டன்), ஜெயராசா பிரதீபன் (இணுவில்), ஜெயராசா பிரசன்னா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், தர்மவரதன், பிரதீபா, பிரபா ஆகியோரின் மாமியாரும், தனுஷன் - விதுரா, விகாஷ், அனிஷ், அன்ஜனா, டிலக்ஷிகா, கேதவராகி, தாமிரா, சங்கீர்னா, விஷ்வந் அகியோரின் அன்புப் பேர்த்தியும், ஆதவ் இன் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.09.2025) ஞாயிற்றுக்கிழமை மதியம் 12.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு
077 923 8852

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 3947) A



ஏ-9 வீதியில்

## திடீரெனத் தீப்பற்றிய கார் தீயணைப்புப்பிரிவு அசண்டை

கிளிநொச்சி, செப்.6


கிளிநொச்சிக்கு அருகாமையில் ஏ-9 வீதியில் கந்தசுவாமி ஆலயத்துக்கு அருகாமையில் பயணித்துக் கொண்டிருந்த கார் ஒன்று திடீர் எனத் தீப்பற்றி எரிந்துள்ளது. இந்தச் சம்பவம் நேற்று மதியம் நடந்துள்ளது. காரைவிட்டுச் சாரதி இறங்கி ஓடியதில் அவர் தீ விபத்தில் இருந்து தப்பித்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் தீயணைப்புப் பிரிவுக்கு அழைப்பு மேற்கொண்டபோதும் அங்கு ஊழியர்கள் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டது. கிளிநொச்சி பொலிஸாருக்குத் தகவல் வழங்கிய நிலையில் அவர்களும் தீயை அணைத்த பின்னரே அந்தப் பகுதிக்கு வருகை தந்தனர்.

இத்தகைய விபத்துகளோ அல்லது வேறு சம்பவங்களோ இடம்பெறும் பட்சத்தில் பொலிஸார் மற்றும் தீயணைப்புப் பிரிவினர் உரிய நேரத்துக்கு சம்பவ இடத்துக்குச் சென்று தமது கடமையை சரிவர ஆற்றவேண்டும் என அங்கிருந்தவர்களால் தெரிவிக்கப்பட்டது. (சு- 27-113)

# மரண அறிவித்தல்

மலர்வு 24 . 10 . 1951



உதிர்வு 05 . 09 . 2025

## குணரத்தினம் சிவபாலன்

**(ஓய்வு நிலை பொறியியலாளர் கல்வித் திணைக்களம் யாழ் மாவட்டம்)**

சுன்னாகத்தை பிறப்பிடமாகவும், இல 109, 3ம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் குணரத்தினம் சிவபாலன் அவர்கள் நேற்று (05.09.2025) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குணரத்தினம் - சரஸ்வதி தம்பதயரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான முத்துத்தம்பி - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் வசந்திமாலா (ஓய்வு நிலை கோட்டக்கல்விப் பணிப்பாளர் யாழ்ப்பாணம்) அவர்களின் அன்புக்கணவரும், மதுரா (பொறியியலாளர் கட்டடங்கள் திணைக்களம் வவுனியா), கௌசல்யன் (பொறியியலாளர் Meta Company சியாட்டல் அமேரிக்கா) அவர்களின் பாசமிகு தந்தையும், மிதுன் (பொறியியலாளர் Tokyo Cement Company திருகோணமலை), கௌதமி (பொறியியலாளர் அமேரிக்கா) ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்றவர்களான தேவதாசன், ரவீந்திரன், பரமேஸ்வரி, றஜனி மற்றும் ரவிகுலதிலகம் (இந்தியா), ராதா கிருஸ்ணன் (U.K), இளங்கோவன் (U.K), றஞ்சனி (ஜேர்மனி), ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஹரிகேஷ், ஹரிவர்ஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (07.09.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நன்பகல் 12.00 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதனை அறியத்தருகின்றோம்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.
021 222 9411

இல 109 3ம் குறுக்குத் தெரு
யாழ்ப்பாணம்.

# மரண அறிவித்தல்

தோற்றம் 05 . 09 . 1956



மறைவு 04 . 09 . 2025

## அமரர் சிவராணி நல்லநாதன் (ராஜி)

வவுனியா வைரவர் புளியங்குளத்தை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் சிவராணி நல்லநாதன் (ராஜி) அவர்கள் நேற்றுமுன்தினம் (04.09.2025) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை - கண்மணி தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான நல்லையா - இரத்தினாம்பிகை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்றவர்களான சிவகாமி, சிவகுரு, சிவபாலன், சிவநாயகி, சிவானந்தன் மற்றும் சிவசோதி (வவுனியா), சிவயோகம் (வவுனியா) ஆகியோரின் சகோதரியும், நல்லையா நல்லநாதன் (உரிமையாளர் பிள்ளையார் மெட்டல் லக்ஷ்மி கேட்டரிங் சேர்விஸ் - வவுனியா) அவர்களின் அன்பு மனைவியும், மயூரன் (முகாமையாளர் LOLC நெல்லியடி கிளை), தீபன் (லண்டன்), பைரவி (அபிவிருத்தி உத்தியோகத்தர் இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்பு தாயாரும், பவித்ரா (யாழ்ப்பாணம்), அனுஜா (லண்டன்), கிருஷாந்தன் (மக்கள் வங்கி வன்னி பிராந்திய அறவிடல் அதிகாரி) ஆகியோரின் அன்பு மாமியாரும், பிரபாகரன், அபர்ணன், வெண்பா, சூரியா, ஆரவி, விஷாகன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.09.2025) ஞாயிற்றுக்கிழமை இல. 64, வைரவர் கோயில் வீதி, வைரவர்புளியங்குளம், வவுனியா இல் அமைந்துள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் பூந்தோட்டம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
ந.மயூரன் (மகன்) - 077 803 9535
ந.தீபன் (மகன் - லண்டன்) - 0044 750 155 4164
கி.பைரவி (மகள்) - 070 588 6991

தகவல்:
கணவன், பிள்ளைகள், மருமக்கள், சகோதரர்கள், பேரப்பிள்ளைகள்.

(CS/59329) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடைநிறுத்தப்பட்ட வீட்டுத்திட்டத்துக்கு 2026 இல் நிதி விடுவிக்கப்படும்!



பிரதி அமைச்சர் ரி.பி.சரத் தகவல்

**காரைநகர் அபிவிருத்திச் சபையின் புதிய யாப்பு சீர்திருத்தம் மற்றும் சீர்திருத்த அங்கீகாரத்துடனான புதிய நிர்வாக சபைத்தெரிவு ஆகியவற்றுக்கான பொதுக்கூட்டம்**

தலைமை - திரு.விஸ்வலிங்கம் ஹம்சன் (தற்காலிக தலைவர் இடைக்கால நிர்வாக சபை)
இடம் - காரைநகர் பிரதேச கலாசார மண்டபம், வலந்தலைச் சந்தி காரைநகர்.
காலம் - 28.09.2025 ஞாயிற்றுக்கிழமை
நேரம் - காலை 10.30 மணி
குறிப்பு - ஆயுட்கால மற்றும் 2024 ஆண்டு சந்தா செலுத்திய அங்கத்தவர்கள் அனைவரும் கலந்து கொள்ள முடியும்.

காரைநகர் அபிவிருத்திச் சபை
சின்னாலடி, காரைநகர்
தொலைபேசி - 021 221 1757
06.09.2025

திரு.பொன்னம்பலம் பரந்தாமன்
செயலாளர்
இடைக்கால நிர்வாக சபை

(CS 59321) E

யாழ்ப்பாணம், செப்.6

கடந்த ஆட்சிக்காலத்தில் சிறு நிதி வழங்கப்பட்டு பின்னர் நிறுத்தப்பட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் வீடுகளுக்கான மிகுதி நிதி அடுத்த ஆண்டு முதல் எமது அரசாங்கத்தினால் வழங்கப்படும் என நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்புப் பிரதி அமைச்சர் ரி.பி.சரத் உறுதியளித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் நகர அபிவிருத்தி, நிர் மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சினால் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்களின் மீளாய்வுக் கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை யாழ்.மாவட்டச் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த ஆட்சிக்காலத்தில் சிறு நிதி வழங்கப்பட்டு ஆரம்பிக்கப்பட்டு நிறுத்தப்பட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் 3 ஆயிரத்து 847 வீடுகளுக்கான மிகுதி நிதி அமைச்சரவைப்பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டு அடுத்த ஆண்டு முதல் இரண்டு ஆண்டுகளுக்குள் வழங்கப்படும்.

யாழ்.மாவட்டத்தின் மீள்குடியேற்றச் செயற்பாடுகளுக்காக எமது அமைச்சின் ஊடாக இவ்வாண்டு ஆயிரத்து 259 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கிராமங்கள் ரீதியாக பிரஜா சக்திக் குழுக்கள் அமைக்கப்பட்டு மக்களின் பிரச்சினைகள் ஒன்றிணைந்து தீர்க்கப்படும் -என்றார். (ச-66)

**THE ROYAL COLLEGE OF JAFFNA**
தனியார் கல்வி நிறுவனம். சங்கானை
ஆண்டு 1 இல் இருந்து A/L கலைப்பிரிவு
மாணவர்கள் வரை சிறு குழுக்களாக வகுப்புக்கள்.
சிறந்த ஆசிரியர் குழாம், தனித்தனி கவனம்.
குபேரன் கட்டடம், சங்கானை.
Tel- 077 675 1649

**01 ஆம் ஆண்டு நினைவலைகள்**

பிறப்பு
21.05.1943



இறப்பு
16.09.2024

அமரர் B.J.நவரட்ணம்
(Electrical contractor)

**09 ஆம் ஆண்டு நினைவலைகள்**

பிறப்பு
10.12.1942



இறப்பு
01.04.2016

அமரர் புவனேஸ்வரி நவரட்ணம்
(பண்டிதர் சைவப்புலவர்)


காலங்கள் பல கடந்து போனாலும்
எங்கள் அன்புத் தெய்வங்களின் நினைவுகள்
எங்கள் நெஞ்சினில் நித்தம் குடியிருக்கும்

"நிலாமனை"
மட்டுவில் தெற்கு சாவகச்சேரி

பிள்ளைகள்
077 266 8636

**25ஆம் ஆண்டு நினைவஞ்சலி**

தோற்றம்
18.10.1939



மறைவு
12.09.2000


**அமரர் சுப்பிரமணியம் தியாகராஜா**
(ஆயுர்வேத வைத்தியர்)
திதி : சதுர்த்தசி

இருபத்து ஐந்து ஆண்டுகள் ஓடி மறைந்தாலும்
ஆயிரம் கைகள் அணைத்துவிட இருந்தாலும்
அப்பா என்ற ஒற்றக்கை இல்லை என்றால்
இங்கே அனைவரும் அநாதை தான்
அப்பா எனும் நாமத்திற்கு அணையாத எம் தீபமே
சுடர்விட்டு என்றென்றும் பிரகாசிக்க வணங்குகின்றோம்

பிள்ளையார் கோவிலடி
வலியடைப்பு
(CS 3938) E
குடும்பத்தினர்

**13ம் ஆண்டு நினைவு நாள்**

அன்னை மடியில்
06.10.1954



ஆண்டவன் அடியில்
29.08.2012

**அமரர் இளையதம்பி அருமைநாதன் (அருமை)**
திதி : வளர்பிறை சதுர்த்தசி (06.09.2025)

அப்பா!
வெண் நிலவில் உங்கள் வதனம்
உருகும் நினைவுகளில் எங்கள் இதயம்,
அலைகளிலே உங்கள் சலனம்,
வருடும் திவலைகளில் எங்கள் தருணம்,
தென்றலிலே உங்கள் ஸ்பரிசம்
யார் தீர்ப்பது எங்கள் கலக்கம்.
என்றும் உங்கள் ஆத்மா சாந்திக்காக இறைவனை வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !

தேவாலய வீதி
நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.
(CS/59328) J-1
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2025 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள்

### விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம்

சி.சஞ்சயன் 155 , சி. கிருத்திகன் 149 , தி.மஜீஸ் 145, வி.ஸ்வராலினி 135, சு. கஜிஸ்ஷன் 135

### நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயம்

ம. மதுமிதா 134, பி. பிரனுஜா 118, வி. கனிரா 111, வி. டிலக்ஷன் 100, சு. நிவேதா 90

### உசன் இராமநாதன் மகா வித்தியாலயம்

சி. கனிஷ்கா 154, ம. ஷர்விகா 151 , ந. மகிஷன்யா 138

### உடுவில் மகளிர் கல்லூரி

அஷ்விதா ராஜ்குமார் 184, அக்ஷிதா ராஜ்குமார் 178, அபித்தா டெர்ன்பைரன் 164, தனீஷ் வரதன் 161, ஆன் ஜெஷீரா அன்ரன் 159, டினோஜன் திருவேட்கரன், 156 அனெட்பாத்திமா ததீஷ் 154, சமீனா சதீஸ்வரன் 153, அதீஷன் செந்தூரன் 152, தக்ஷணா கஜன் 151, பவிஷாகினி அருள்நாதன் 150, சஷ்வின் சுவர்ணன் 150, திலுக்ஷன் சர்வேஸ்வரன் 149, மூவினா தாக்கூர் 149, அக்ஷரா ஜெகதீஸ்வரன் 149, கவின் பிரதீப்குமார் 148,ஷியாரா ரோஜெஸ்மெல் 148, லயா ஜீவசுதன் 147, ஷேகி கனிஸ்தீபன் 147, தினுசிக கபிலன் 147, ஜான்ஜெப்ரியல் ஜெரின்சலன் 146, ஷரினி சயந்தன் 146, மோகிஷன் சங்கீர்த்தனன் 145, நாஸ்திகா சதீசன் 145, தர்ணிகா சுகுணன் 144 நிலுக்ஸிகா ஜீவானந்தம் 144, ஜோசுவா றெனோஸ்ரன் 144, ஆர்த்திஹான் பாலேஸ்வரன் 143, சஞ்சனா ரஜனிகாந்தன் 143, டெர்லின் ஜோசப் தயாநேசன் 143, சஜானவி பிரசாந்த் 142, ஜொய்லின் சின்னையா 142, அகர்சன் சிவதர்சன் 142, கன்சிகா சுதர்சன் 141, லிஷானி திலகதாசன் 141, நயோமிக்கா கிறிஸ்டி ஜோசப் கருணைராஜன் 141, ஆராதனன் துஷாந்த் 141, கபிஷ்கா ஜெனிதாஸ் 139, சஸ்ரியா விஜியந்தன் 139, ஜட்சிகா கனேஸ்குமார் 138, லத்விகன் ஜெயக்குமார் 137, கபிலக்சன் ஆனந்தநாதன் 136, திகலலோவியன் ஜீவதாஸ் 136,ஹரிணி சிவானந்தன் 136, துலக்சி தயாளன் 134, ஆத்விக் ஸ்ரீகரன் 133, ஹோசிகன் தவசீலன் 132, சிஜானி லியசுதன் 132, ஜஸ்மினி சிவராமன் 132,சஞ்சனா பார்த்தீபன் 132, கபிதன் அகிலன் 132

தமிழ்மொழிப் பரீட்சார்த்திகளில்

## வவு. இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி மாணவி தேசிய ரீதியில் இரண்டாமிடம்!



வவுனியா, செப்.6
2025 ஆம் ஆண்டுக்கான ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளில் தமிழ்மொழி மூலமான பரீட்சார்த்திகளில் வவுனியா இறம்பைக்குளம் மகளிர் கல்லூரியைச் சேர்ந்த அரோனிக்கா ரேச்சல் என்ற மாணவி 189 புள்ளிகளைப் பெற்று நாடாளாவிய ரீதியில் இரண்டாமிடம் பிடித்துள்ளார்.
அத்துடன் அவர் மாவட்ட ரீதியில் முதலாம் இடத்தையும் வடக்கு மாகாண ரீதியில் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளார்.
புலமைப்பரிசில் பரீட்சையில் தேசிய ரீதியில் வவுனியா தெற்கு வலய மாணவி ஒருவர் இரண்டாம் இடம்பெற்றமை இதுவே முதல்முறையாகும். (ச-25,110)

## கிளிநொச்சி இந்து ஆரம்ப வித்தி மாணவன் மாவட்டத்தில் முதலிடம்



கிளிநொச்சி, செப்.6
2025ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளின்படி கிளிநொச்சி இந்து ஆரம்ப வித்தியாலய மாணவன் ச. ஜீவேஸ் 175 புள்ளிகளைப் பெற்று கிளிநொச்சி மாவட்டத்தில் முதல் இடத்தைப் பெற்றுள்ளார்.
அதே பாடசாலையைச் சேர்ந்த கே.பிரசாந் 169 புள்ளிகளைப்பெற்று மாவட்டத்தில் 3 ஆம் இடத்தைப் பிடித்துள்ளார். இதேவேளை ச.அட்சனா 166, த.டேனுசா 154, ர.கஜலக்சி 151, பா.நிஷதீபன் 148, வி.ஒளியரசி 148, லோ.வர்சிகா 147, பி.பிரவஸ்தினி 146, ஜெ.மகிஷாந் 145, சு.தேனுசா 141, வி.தமிழ்வாணன் 136, து.சதுஸ்ரிகா 136, வி.தமிழ் ஒளி 132 ஆகிய புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்துள்ளதுடன், விசேட தேவையுடைய மாணவி பெ.புகழரசி 54 புள்ளிகளைப் பெற்றுள்ளார். (ச-25,113)

## கருங்கண்டல் றோ.க. த. ம. வி. மாணவன் மன்னாரில் முதலிடம்



மன்னார், செப்.6
தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள் வெளிவந்துள்ளநிலையில் கருங்கண்டல் றோமன் கத்தோலிக்க தமிழ் மகா வித்தியாலய மாணவன் ச.லெசோடரன் 174 புள்ளிகளைப் பெற்று மன்னார் மாவட்டத்தில் முதலாவது இடத்தைப் பெற்றுள்ளார்.
பாடசாலையிலிருந்து 18 மாணவர்கள் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய நிலையில் அவர்களில் 8 மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்குமேல் மதிப்பெண்களைப் பெற்றுச் சித்தியடைந்துள்ளனர். (ச-25,213)



## சந்நிதியான் ஆச்சிரம ஆன்மிக அருளுரை!

யாழ்ப்பாணம், செப்.6
தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய வருடாந்தத் திருவிழாவின் 14ஆம் நாள் திருவிழாவை முன்னிட்டு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைப் பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில், 'மனிதனுடன் ஆன்மிகமும் உளவியலும்' என்ற தலைப்பில் ஆன்மிக அருளுரை நிகழ்த்தப்பட்டது.
சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை உறுப்பினர்கள், நிர்வாகிகள், தொண்டர்கள், அடியவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (ச-27)

## மன்னாரில் மதிப்பளிப்பு

மன்னார், செப்.6
தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் வெட்டுப்புள்ளிக்குமேல் புள்ளிபெற்றுச் சித்தியடைந்த மன்னார் அல்அஸ்ஹர் ம.வி. தேசிய பாடசாலை மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது.
பாடசாலை அதிபர் திருமதி எஸ்.எப்.பஸ்மி தலைமையில் சாதனை படைத்த மாணவர்கள், பதக்கம் அணிவித்துப் பரிசு வழங்கிக்கௌரவிக்கப்பட்டனர். குறித்த பாடசாலை மாணவர்களான றிப்கி றிஸாமா 153, ஹிஜாஸ் ஹிபா 137, லுக்மான் அஹமட் 136, அர்ஷத் கான் ஹயாலீனா 133, அபான் ஆசிப் அஹமட் 131 புள்ளிகளையும் பெற்றுச் சித்தியடைந்துள்ளனர். (ச-25,66)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வடக்கு, கிழக்கு மாகாண மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் உறுதி!

## வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு

**கொழும்பு, செப்.6**

**வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் மக்களுக்குப் பல்வேறு பிரச்சினைகள் உள்ளன. அவற்றுக்குத் தீர்வை வழங்குவதிலும், பொருளாதாரப் பிரச்சினைகளுக்கான தீர்வுகளின் ஊடாக நிலையான அமைதியைக் கட்டியெழுப்புவதிலும் அரசாங்கம் உறுதியாக உள்ளது என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார். வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கும், வெளிவிவகார அமைச்சருக்கும் இடையே கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

புதிய அரசாங்கம் என்ற ரீதியில் நாட்டின் மனித உரிமைகள் நிலைவரத்தை மேம்படுத்தும் நோக்கில் மாறுபட்ட பல நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அவற்றின்மூலம் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றங்கள் அடையப்பட்டுள்ளன. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வை வழங்குவதிலும், அமைதி மற்றும் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதிலும் அரசாங்கம் உறுதியாக உள்ளது என்றார். பயங்கரவாதத்தடைச்சட்டத்தை நீக்குவதற்கு முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை, நிகழ்நிலைக்காப்புச்சட்டத்தை மறுசீரமைப்பதற்கான நகர்வுகள், ஊழல் ஒழிப்பு செயற்றிட்டம், க்ளீன் ஸ்ரீலங்கா செயற்றிட்டம், காணாமல் ஆக்கப்பட்டோர் பற்றிய அலுவலகம் மற்றும் இழப்பீட்டுக்கான அலுவலகம் என்பன உள்ளடங்கலாக உள்ளகக் கட்டமைப்புகளின் சமகால முன்னேற்றங்கள், சுயாதீன வழக்குத்தொடுநர் அலுவலகத்தை உருவாக்குவதற்கான தீர்மானம் உள்ளிட்ட நகர்வுகள் தொடர்பாகவும் இந்தச் சந்திப்பில் அமைச்சர் விஜித ஹேரத் இராஜதந்திரிகளுக்கு விளக்கமளித்துள்ளார். (எ-இ)

# கட்டாக்காலி நாய்களுக்கு கருத்தடை செய்ய ஏற்பாடு

யாழ்ப்பாணம், செப்.6

கட்டாக்காலி நாய்களைக் கட்டுப்படுத்த கருத்தடைத் திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது. அதற்கான பணி நெடுந்தீவில் ஆரம்பிக்கப்படும் என்று வட மாகாண உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது.

வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சு, வடக்கு மாகாண சுகாதார அமைச்சு, வடக்கு மாகாண விவசாய அமைச்சு ஆகியன இணைந்து இந்தச் செயற்றிட்டத்தை முன்னெடுப்பது தொடர்பில் ஏற்கனவே ஆராயப்பட்டிருந்தநிலையில், அது தொடர்பாக உள்ளூராட்சிமன்றங்களின் செயலர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டுள்ளது. அதன் ஓர் அங்கமாக நாய்களுக்குக் கருத்தடை செய்வது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இந்தத்திட்டம் மூன்று ஆண்டுகளுக்குத் தொடரும் எனக் கூறப்படுகின்றது. இதன் ஆரம்பச் செயற்றிட்டம் நெடுந்தீவில் நடைபெறவுள்ளது. ஒவ்வொரு மாவட்டங்களிலும் நகர்ப்புறங்களில் இதற்கான செயற்றிட்டத்தை முன்னெடுப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது. (எ-இ)



# சுகாதாரமற்ற உணவு விற்பனை மன்னாரில் உணவகத்துக்கு 'சீல்'

மன்னார்.செப்.6

மன்னார் நகரப்பகுதியில், உரியமுறையில் பதிவுசெய்யப்படாமல், சுகாதாரமற்ற உணவுகளைத் தயாரித்து பொது மக்களுக்கு விற்பனை செய்த உணவகமொன்றுக்குச் சீல் வைக்கப்பட்டுள்ளது.

நீண்ட நாள்களாக உரிய அனுமதியின்றி, அசுத்தமாக இயங்கிவந்த குறித்த உணவகம், மன்னார் பொதுச் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையினரால் நேற்றுமுன்தினம் சுற்றிவளைக்கப்பட்டது.

இதன்போது குறித்த உணவகத்தில் கழிவுநீர் வெளியேற்றப்படாமல், புழுக்கள், ஈக்கள் குவிந்திருந்ததுடன், சுகாதாரமற்ற முறையில் உணவுகள் தயாரிக்கப்பட்டு களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தமை கண்டறியப்பட்டது.

இதனையடுத்து அதிகாரிகள் உணவகத்துக்குச் சீல் வைத்து மூடியதுடன் உணவகத்தின் உரிமையாளருக்கு எதிராக, மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்துள்ளனர். (ச- 213,56)



### தமிழகக் கலைஞர்களால்

# நல்லூர் சிவகுரு ஆதீனத்தில் வள்ளிக்கும்மி ஆற்றுகை!

யாழ்ப்பாணம், செப்.6

தமிழகத்திலிருந்து வருகைதந்த கலைஞர்களின் வள்ளிக்கும்மி நடன ஆற்றுகை நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நல்லூர் சிவகுரு ஆதீனத்தில் இடம்பெற்றது.

தமிழகத்திலிருந்து காங்கேசன்துறையூடாக 150க்கும் அதிகமானோர் யாழ்ப்பாணத்தை வந்தடைந்து இந்த வள்ளிக்கும்மி நடனத்தை ஆற்றினார்கள்.

இவ்வாற்றுகை இரு நாடுகளுக்கிடையிலான இனநல்லுறவை வலுப்படுத்தும் நோக்கிலும் தென்னிந்தியாவின் பாரம்பரியக் கலையை ஈழத்து மக்களிடம் கொண்டுசென்று சேர்க்கும் முகமாகவும் நிகழ்த்தப்பட்டது.

நிகழ்வில் சிவகுரு ஆதீனத்தினத்தினர், குரலற்றவர்களின் குரலமைப்பினர் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-41-27)

### தற்காப்புக் கலையில்

# முல்லை விநாயகபுரம் அ.த.க.பாடசாலை தேசிய மட்டத்தில் இரண்டு பதக்கங்கள்

முல்லைத்தீவு, செப்.6


முல்லைத்தீவு விநாயகபுரம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை 2025ஆம் ஆண்டுக்கான தேசியமட்ட மல்யுத்தப் போட்டியில் இரண்டு பதக்கங்களைத் தனதாக்கியுள்ளது. குறித்த பாடசாலையைச் சேர்ந்த செ.யதுர்சன் மற்றும் க.லோஜினி ஆகியோரே வெண்கலப் பதக்கத்தைப் பெற்றுக்கொண்டுள்ளனர். கம்பஹா உள்ளக விளையாட்டு அரங்கில் அண்மையில் இந்தப் போட்டி நடைபெற்றது.

அதேவேளை குறித்த பாடசாலை மாகாணமட்டப் போட்டியில் 30பதக்கங்களினைத் தனதாக்கியமை குறிப்பிடத்தக்கது. (ச-27)



# மரண அறிவித்தல்

## மயில்வாகனம் சிறிதரன்



**பிறப்பு 23.10.1959** **இறப்பு 04.09.2025**

பொன்னாலையை பிறப்பிடமாகவும், மட்டுவில் ஐ வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் சிறிதரன் அவர்கள் (04.09.2025) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - புவனேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், சிவசோதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும், சுபத்திரா, யோகதாஸ் (நாராயணா), ஜேயந்திரா, வசந்திரா, காலஞ்சென்ற ஜெயதீசன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிறிகாந்தன் (பிரான்ஸ்), கபிலன் ஆகியோரின் தந்தையும், சுந்தரலிங்கம், சற்குனராசா (ஜேர்மன்), புவிச்சந்திரன் (பிரான்ஸ்), சிவா, முருகதாஸ் (பிரான்ஸ்), வசந்தராசா, தவராசா (பிரான்ஸ்), றோகினி (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.09.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 09.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்.
தொடர்பு: 077 436 4068

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

தோற்றம்
04 . 11 . 1948



மறைவு
04 . 09 . 2025

### சின்னத்தம்பி கனகலிங்கம்

புங்குடுதீவு முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் பெருமாள் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி கனகலிங்கம் அவர்கள் கடந்த 04.09.2025 அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - பராசக்தி தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற பசுபதி - கண்ணம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், சந்திராவின் அன்புக் கணவரும், கண்ணன் (Canada), மன்னன், சுரேஷ், காலஞ்சென்ற அனுசியா மற்றும் கிரிசா, தனுசா ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், கிரிஜா, சர்மிளா, குமுதா, முரளிதரன், கசிபன் ஆகியோரின் அன்பு மாமனாரும், ஆனந்தன், நளினி ஆகியோரின் மைத்துனனும், வைத்தீஸ்வரன், காலஞ்சென்ற பேரின்பம், மகேஸ்வரி மற்றும் லோகேஸ்வரி, சுந்தரலிங்கம், ஞானேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், விஸ்ணுாதரன், செந்தூரன், பிரதீஸ், விதுசாயினி, லக்சாயினி, கிரிசான், துஷானிகா, சபரிஸ்கா, கவிஸ்னன், வருன், அஹானா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 07.09.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கட்டையாலடி, கோண்டாவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**077 341 4175**
**077 946 5737**

**இருபாலை வீதி, பொதிகை வீதி**
**பழனியாண்டவர் கோவிலடி**
**கோண்டாவில்**

(CS 59325) E

## மரண அறிவித்தல்

தோற்றம்
31 . 08 . 1949



மறைவு
04 . 09 . 2025

### திருமதி அருளானந்தம் திரேசம்மா (ராணி)

கூழாவடி ஆனைக்கோட்டையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அருளானந்தம் திரேசம்மா (ராணி) 04.09.2025 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அருளானந்தம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான மிக்கேல் - ஞானம்மா தம்பதியரின் அன்பு மகளும், மடுத்தீன் - மதலேனம் தம்பதியரின் அன்பு மருமகளும், அன்ரன் அல்விசன் (டென்மார்க்), அன்ரன் அலிஸ்ரன் (அவுஸ்திரேலியா), வில்பிறேட் (பிரித்தானியா), மரிய செலஸ்ரீன் (அவுஸ்திரேலியா), லெற்றீசியா ஆகியோரின் பாசமிகு தாயாரும், மேரி நிசாந்தினி (டென்மார்க்), மரிய ஜெலா (அவுஸ்திரேலியா), மேரி ஜென்சியா (பிரித்தானியா), மேரி அனுஷா (அவுஸ்திரேலியா), கௌரவ அலெக்ஸ்ராஜா (மேல் நீதிமன்ற நீதிபதி - வடமாகாணம்-கிளிநொச்சி) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சரினா, அன்றியாஸ், நெற்றீசியா (டென்மார்க்), எமிலி, அஸ்மி, ஆகாஸ் (அவுஸ்திரேலியா), யூனிற்ரா, ஜெப்ரீனா, ரொணி (பிரித்தானியா), டிலக்சன், நிறுசன், மொறிசன் (அவுஸ்திரேலியா), கிறேசியன் தியான், கிறேசியன் திசோன், கிறேசியன் திவின் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவரான தங்கமணி மற்றும் புஸ்பம், ராசாத்தி, அல்பிறேட், டேவிட், மரியதாஸ், லலிதா ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.


அன்னாரின் இறுதி வழிபாடு 08.09.2025 திங்கட்கிழமை மாலை அவரது இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் 3.00 மணியளவில் புனித அன்னாள் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு தொடர்ந்து காக்கைதீவு அன்னாள் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 39527) A

## மரண அறிவித்தல்



### திருமதி
### வியாழம்மா சின்னத்துரை

யாழ். கரம்பொனைப் பிறப்பிடமாகவும், கொழும்பு கொட்டாஞ்சேனையை வசிப்பிடமாகவும், யாழ். கரம்பொனை தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட வியாழம்மா சின்னத்துரை அவர்கள் கடந்த (02.09.2025) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - பார்வதி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - கனகம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சின்னத்துரை அவர்களின் அன்பு மனைவியும், மனோகௌரி, மணிமேகலை, ரஞ்சனிதேவி, பாஸ்கரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், சத்தியமூர்த்தி, காலஞ்சென்ற அருட்செல்வன் மற்றும் கணேசவேல், சரண்யா ஆகியோரின் அன்பு மாமியாரும், கிதுஷியன், நிதுஷன், கிஜேவ், சௌமிதி, பரோன், ஷானியா, அரோன், அனயா ஆகியோரின் பாசமிகு பேத்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நாளை (07.09.2025) ஞாயிற்றுக கிழமை காலை 7.00 மணி முதல் 9.00 மணிவரை அவரது இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் கரம்பொன் கோட்டைவாசல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

Live streaming - Ripbook சார்பாக இறுதிக்கிரியை நேரடி ஒளிபரப்பு செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**கரம்பொன் கிழக்கு,**
**காளிகோவிலடி,**
**ஊர்காவற்துறை.**

தகவல்
**குடும்பத்தினர்**

| | |
|---|---|
| பாஸ்கரன் (மகன்) | +447572362290 |
| மனோ (மகள்) | +94776681981 |
| இரஞ்சினிதேவி (மகள்) | +41799245110 |
| மணிமேகலை (மகள்) | +94778349627 |

(CS 3954) A

தோற்றம்
03.04.1950

மறைவு
02.09.2025

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேசத்தைத் திருப்திப்படுத்த விசாரணை நடத்தப்படவில்லை!

## நீதி அமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு செப். 6

ஐ.நா. சபையையோ அல்லது சர்வதேச சமூகத்தைத் திருப்திப்படுத்தவோ மனிதப் புதைகுழிகள், காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்படவில்லை. தேசிய நல்லிணக்கத்தை உறுதிப்படுத்த வேண்டுமாயின் கடந்தகாலச் சம்பவங்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுக்கவேண்டும் என்ற ரீதியிலேயே அவை முன்னெடுக்கப்படுகின்றன இவ்வாறு நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன நாணயக்காகர தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கடந்த காலங்களில் காணாமலாக்கப்பட்டோர் தொடர்பில் முறையாக விசாரணைகளை ஆரம்பித்துள்ளோம். வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்கள் அரசாங்கத்தின் மீது அதீத நம்பிக்கை கொண்டுள்ளனர்.

ஏனைய மனித புதைகுழிகள் இடத்தை காட்டிலும் குருக்கள்மடத்தின் நிலைமை மாறுபட்டது. 2014 ஆம் ஆண்டு இந்த இடம் தொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள் ளன. 2019ஆம் ஆண்டு இந்த இடத்தை பரிசோதனை செய்வதற்கு நீதிமன்ற சட்ட மருத்துவ அதிகாரிகளின் ஒத்துழைப்பு மற்றும் அகழ்வு பணிகளுக்கு தேவையான நிதியை வழங்க வேண்டும் என்று காணாமல் போனோர் தொடர்பான அலுவலகம் குறித்த தரப்பினருக்கு வலியுறுத்தியுள்ளது. முன்னாள் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச மற்றும் அந்த அரசு அதற்குரிய வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்கவில்லை.

எமது அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் கிடைத்த முறைப்பாடுகள் மற்றும் கடந்த கால முறைப்பாடுகள் காணாமல் போனோர் அலுவலகத்தின் தலைமையீட்டுடன் முறையாக விசாரிக்கப்படுகிறன. காணாமல் போனோர் தொடர்பான அலுவலகத்துக்கு வரவுசெலவுத் திட்டத்தின் ஊடாக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அகழ்வு பணிகள் தொடர்பில் மருத்துவ அதிகாரிகள் உட்பட துறைசார் நிபுணர்கள் வழங்கும் பரிந்துரைக்கு அமைய எவ்வளவு நிதி ஒதுக்க வேண்டும் என்பதை நீதிமன்றமே தீர்மானிக்கும். இங்கு நிதி பிரச்சினையில்லை. மனிதாபிமானம் தொடர்பில் பிரச்சினை காணப்படுகிறது என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும்.

சகல மனிதப்புதைகுழிகள் தொடர்பில் வெளிப்படைத்தன்மையுடன் செயற்படுகிறோம். ஐக்கிய நாடுகள் சபை, தென்னாபிரிக்கா, சுவிற்ஸர்லாந்து போன்ற நாடுகள் உட்பட சர்வதேச அமைப்புக்கள் மற்றும் நிறுவனங்கள் இந்தநடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க இணக்கம் தெரிவித்துள்ளன. இந்தமாதம் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரின் போது இந்த விடயங்கள் பேசப்படவுள்ளன என்று குறிப்பிடப்படுகின்றது. நாட்டு மக்களுக்காக விசாரணைகளை மேற்கொள்கின்றோமே தவிர, சர்வதேச சமூகத்தை மகிழ்விப்பதற்காகவல்ல என்பதைக் குறிப்பிட விரும்புகின்றேன். களுவாஞ்சிகுடி மற்றும் குருக்கள்மடம் மனித புதைகுழிகள் தொடர்பில் முறைப்பாடளிக்க வேண்டும் என்று பொதுக்களிடம் கேட்டுக்கொள்கிறேன். நிச்சயம் நீதி பெற்றுக்கொடுக்கப்படும்- என்றார். (எ-இ)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



Congratulations

**2025 ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சையில் 164 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த யா/சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை மாணவி**

## செல்வி.ப.கிருஷிகா

**(164 புள்ளிகள்)**

**"இலட்சிய வெறி குன்றாமல் கவனம் சிதறாமல் பார்வை விலகாமல் வெறி கொண்டு பாய்ந்தால் வெற்றி நிச்சயம் நீயே நல்ல உதாரணம்**

**கல்வி கற்பித்த அதிபர். ஆசிரியர்களுக்கு நன்றியைத் தெரிவிப்பதோடு மேலும் கல்வியால்முன்னேறபாராட்டி வாழ்த்துகின்றோம்.**

வாழ்த்துவோர் :
அம்மம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமா குடும்பத்தினர்

"வசந்தம்"
கண்டி வீதி, சாவகச்சேரி

THE HALO TRUST

450 Thirunagar West
Kilinochchi
Sri Lanka
T: +94 (0) 212 285 466
vanni@halosrilanka.org
mail@halosrilanka.org
www.halotrust.org

### Job vacancy – Finance Officer

HALO Trust is looking for dedicated and attentive individuals for the position of Finance Officer.
**Job Title:** Finance Officer
**Location:** Killinochchi / Mullaitivu (KKD)
**Employment Type:** Contract
**Application Deadline:** 17th September 2025.

**About the Role:**
The HALO Trust is the world's largest and oldest international humanitarian mine action non-government organization (NGO). For over thirty years, we have been saving lives and helping war-torn communities recover, by making their land safe. Our mission is to protect lives and restore the livelihoods of those affected by conflict.
HALO has been working in Sri Lanka since 2002 and now has over 1,000 staff working in the Northern Province with offices in Jaffna, Kilinochchi and Mullaitivu. To date, HALO has safely destroyed over one million items of explosive ordnance, including more than 300,000 anti-personnel landmines. HALO and other mine action stakeholders are working to clear Sri Lanka of all known contamination by 2028 to meet Sri Lanka's obligations as a state party to the Anti-Personnel Mine Ban Convention.
We are looking to recruit Finance officer – Kilinochchi / Mullaitivu (KKD) Offices. Provide support to ensure the finance Process is delivered on time and to a high standard. The Finance officer has the overall responsibility of assisting a smooth implementation of day-to-day accounting transactions and administrative duties including communication supports for the HQ and Jaffna office, ensuring implementation of donors' rules and regulations and HALO Trust finance polices & procedure.

**Key Responsibilities:**
- Accurate and timely recording of financial transactions in HALO's online accounting system
- Ensuring proper and timely archiving of financial records, including digital and physical archives
- In charge of petty cash payments, and support cheque payments including on-line payments of assigned project/s
- One of the key users in NetSuite for data entry for all payments and reconciliation.
- Ensuring proper maintenance of the record keeping and filing system of the projects including scanning financial documents
- Review and support Killinochchi /Mullaitivu petty cash book
- Supporting to online payment preparing the monthly cash request
- Assisting with internal and external audits
- Checking all payment documents
- Preparing accounts supporting document for filing and scanning
- Support Jaffna finance team during the month end process and on demand
- Supporting day-to-day operations in Killinochchi/ Mullaitivu
- Supporting day- day activities for procurement and logistic team
- Any other duties as required by the Finance Manager / Killinochchi/KKD Office manager

**Qualifications & Skills:**
Minimum qualification of undergraduate degree in Finance and Business Administration; or the equivalent,
Minimum of 1-3 years of finance work experience in NGO sector
Knowledge and/or experience working in the development sector / donor funded projects would be an asset.
Experience using computerized financial accounting systems, especially online-based ERP systems.
Extensive knowledge of Microsoft Office, particularly Excel, as well as the ability to learn other software tools readily and implement/use them successfully.

What We Offer:
- A collaborative and supportive working environment.
- Opportunities for professional development and growth
- Competitive salary and benefits package.

How to Apply: Interested candidates are invited to submit their CV and a cover letter to hr@halosrilanka.org with the subject line "Application for Finance Officer Position" by 17th September 2025.
All applications must be submitted to the address given below no later than17th September 2025 to the HR department. For further information, please contact 021 228 5466.

**HR Manager**
**The HALO Trust,**
**450 Thirunagar West, Kilinochchi**
**hr@halosrilanka.org .**

The HALO Trust is a company limited by guarantee
Registered in England No. 2228587 Registered Charity No. 1001813 & SC037870
Registered Office: 50 Broadway, London SW1H 0BL

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்லைக் கடல் நீர் ஏரி வலம்


யாழ்ப்பாணம், செப். 6

மாதந்தோறும் வருகின்ற பௌர்ணமி தினங்களில் வல்லை ஆஞ்சநேயர் ஆலயத்திலிருந்து வல்லைக் கடல் நீர் ஏரி வலம் நிகழ்வை நடத்துவதற்குச் சைவப்பிரகாசப் பேரவை தீர்மானித்துள்ளது.

அதன்படி, செல்வச்சந்நிதி முருகன் தீர்த்தத் திருவிழா தினமான நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணியளவில் வல்லை ஆஞ்ச நேயர் ஆலயத்தில் வல்லைக் கடல் ஏரி வலம் ஆரம்பமாகிச் செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் நிறைவு பெறுமென சைவப்பிரகாசப் பேரவையினர் தெரிவித்துள்ளனர். (ச-66)

# கபிலம்மானின் தாயாருக்கு இறுதி அஞ்சலி நிகழ்வு

திருகோணமலை, செப். 6



தமிழீழவிடுதலைப்புலிகள் அமைப்பின் மூத்த தளபதியும் புலனாய்வுத்துறைத் துணைப்பொறுப்பாளருமான பிரிகேடியர் கபிலம்மானின் தாயாரின் இறுதி அஞ்சலி நிகழ்வு திருகோணமலையில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது.

கபிலம்மானின் தாயார் இராசதுரை செபமாலை தனது 88 ஆவது வயதில் கடந்த 01.09.2025 திங்கட்கிழமை உடல்நலக்குறைவு காரணமாகக் காலமானார். லிங்கநகர் திருகோணமலையில் உள்ள இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த அவரது பூதவுடலுக்குத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், முன்னாள் போராளிகள், பொதுமக்கள் ஆகியோர் அஞ்சலி செலுத்தினர். (ச-25, 100)


## 26 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்
13 • 06 • 1981

சன்னதியான் அடியில்
25 • 08 • 1999

### செல்வி திருமகள் கனகசபை

**திதி: சதுர்த்தசி**

குன்றுகள் தோறும் குடிகொள்ளும் குமரன்- அசுரரை
வென்று தம் பக்தர் குறை தீர்க்கவென
கொற்றங்கொண்ட சந்நிதியின் தேர் காணச் செல்கையிலே
கூற்றுவன் கூட வந்து உனை அழைத்துச் சென்றானோ !

ஆறொடு இருபது ஆண்டுகள் ஓடியே போனதம்மா !
ஆறுமுகன் திருவடியைத் தஞ்சமென நீ சேர்ந்து
திருமகளே உனை எண்ணி ஏங்காத நாளில்லை
அருமைத் தந்தையுடன் சேர்ந்தே அமைதி கொள்வாய்.

தற்காலிக முகவரி:
125, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
நிரந்தர முகவரி:
மீசாலை வடக்கு, மீசாலை.

உன் பிரிவால் வாடும்
குடும்பத்தினர்

(CS/55963) J-1

## காணி விற்பனைக்கு

பொற்பதி வீதியில் றோட் உடன் 4 1/2 பரப்பு காணி நல்ல தண்ணீர் கிணறு, இருபக்க பாதை உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:- 075 945 3391


# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை
# துணைவேந்தர் பதவி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பேரவை 1978 ஆம் ஆண்டைய 16ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 34ஆம் பிரிவு மற்றும் அதன் பின் வந்த திருத்தங்களின் பேரில் செயற்படுமாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பதவிக்கு விண்ணப்பங்களைக் கோரி அழைப்பு விடுக்கின்றது. பதவிக்கான தெரிவு 03/2023 இலக்க 10.04.2023 திகதிய சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ள முறையில் இடம்பெறும் என விண்ணப்பிப்பதற்கு எதிர்பார்த்துள்ளவர்களுக்கு இத்தால் அறியத்தருகின்றேன். விபரங்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் வலைத்தளத்தின் https://www.ugc.ac.lk/attachments{2442_Commission%20Circular%20No.%2003-2023.pdf. இணைப்பிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். பதவிக்கு நியமனம் செய்யப்படும் விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாகவும் 63 வயதிற்குட்பட்டவராகவும் இருக்க வேண்டும். பதவிக்கு நியமனம் செய்யப்படும் விண்ணப்பதாரி நியமனம் பெற்ற தினத்திலிருந்து மூன்று வருடங்களுக்கு அல்லது அவர் தனது 65 வயதைப் பூர்த்தி செய்யும் நாள் வரைக்கும் இவ்விரண்டில் எது முன்வருகின்றதோ அது வரை பதவி வகிப்பார்.

கற்பித்தல்இ கற்றல்இ ஆராய்ச்சி மற்றும் புதுமை, புலமைப்பரிசில் மற்றும் சமூக ஈடுபாடு புலமைத்துவம் என்பவற்றுக்கான உன்னத நிலையங்களுள் தலையாயதாக விளங்குவதே யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உயர்நோக்காகும். உயர்கல்வியின் தரநிலையை உயர்த்துவதும் பொதுவாக நாட்டினதும் குறிப்பாக வடமாகாணத்தினதும் அபிவிருத்திக்கு பொருந்திவரக் கூடிய ஆராய்ச்சியை ஊக்குவிப்பதும் அதன் முன்னுரிமைகளாம். இப்பல்கலைக்கழகம் யாழ்ப்பாணத்தில் ஒன்பது பீடங்களையும் கிளிநொச்சியில் மூன்று பீடங்களையும் (எல்லாமாக 12 பீடங்களை) கொண்டமைந்து ஏறத்தாழ பதின்நான்காயிரத்து முந்நூறு பட்டதாரி மாணவர்களையும் ஆயிரத்து முந்நூறு உயர் பட்டதாரிமாணவர்களையும் கொண்ட தொகையினருக்கு தொழில்சார் மற்றும் சான்றங்கீகாரமளிக்கப்பட்ட பட்டப்படிப்பு நெறிகளை வழங்கி வருகிறது. துணைவேந்தர் இந்நடவடிக்கைகளுக்கு வலுவூட்டித் துணை புரியமாறு எதிர் பார்க்கப்படுகிறார்.

1. துணைவேந்தர் தனது அறிவுசார் வாண்மை மற்றும் மேலாண்மை என்பவற்றின் பிரகாசிப்பினூடாக பல்கலைக்கழகத்தின் உயர்நோக்கு மற்றும் அதன் இலக்குகளை முன்னெடுத்து செல்வதற்கு ஏற்ற வகையில் ஒரு உயர் நோக்கு உடையவராக இருத்தல் வேண்டும். மேலும், துணைவேந்தர் உயர்கல்விக்கான தேசியக் கொள்கைகள் தொடர்பில் தேசத்தின் தேவைகளை இனங் காண்பதற்கு அழைப்பு விடுக்கப்படுபவராகவும் உள்ளார். அவர் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு உள்ளடங்கலாக அவரது தலைமைத்துவம் மற்றும் கல்விசார் நடவடிக்கைகளினூடாக பல்கலைக்கழகத்தை முன்னேற்றுவதற்காகக் காலத்தால் பரீட்சிக்கப்பட்ட விழுமியங்களைப் பலப்படுத்த வல்லவராகவும் இருத்தல் வேண்டும். எனவே விண்ணப்பதாரி கல்வியில் மீயுயர் நிலையும், நாணயமும் வலிமையான ஆராய்ச்சிப் பின்புலத்தோடு கூடிய தலைசிறந்த சாதனைகளுக்கு உரித்துடையவராகவும், பலதிறப்பட்ட ஆர்வக் குழுக்களுடன் அறிவார்ந்த நிலையில் தொடர்புறுவதற்காக நிரூபிக்கப்பட்ட தலைமைத்துவ பண்புகளையும் ஆட்தொடர்பாடல் திறன்களையும் கொண்டவராகவும், கொள்கை விடயங்களில் ஒரு தெளிவான புரிதல் உடையவராகவும், மாணவர் மற்றும் ஊழியர் ஆகியோரின் பல்திறப்பட்ட ஈடுபாட்டைத் தூண்டக்கூடிய வல்லமையுடன் கூடிய உன்னதமான தொடர்பாடற்திறன்களையும் தீர்மானங்களைத் திறம்பட நடைமுறைப்படுத்துவதில் பற்றுறுதியும் கொண்டவராகவும் விளங்குமாறு எதிர்பார்க்கப்படுகிறார்.
   துணைவேந்தர் முழுநேர உத்தியோகத்தர் என்பதோடு அவரே பல்கலைக்கழகத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியும், பிரதம கல்விசார் அதிகாரியும் ஆவார். துணைவேந்தரே பல்கலைக்கழகத்தின் கணக்கீட்டு அதிகாரியும் ஆவார். பல்கலைக்கழகப் பேரவை மற்றும் மூதவை என்பவற்றின் பதவி வழி உறுப்பினரும் தலைவரும் அவரே ஆவார். பல்கலைக்கழகத்துள் ஒழுக்கத்தை பேணும் பொறுப்பு அவருக்குரியது. பல்கலைக்கழகத்தின் சட்டமும் அதன் எந்தவொரு பொருத்தமான கருவியும் விதித்துரைத்தவைகள் முறையாகப் பேணப்படுவதனை உறுதி செய்தல் துணைவேந்தரின் கடமை என்பதனால் அந்த நோக்கத்திற்காக அவர் அவசியம் என்று கருதத்தக்க எல்லா அதிகாரங்களையும் பயன்படுத்துதல் வேண்டும்.
   துணைவேந்தர் கல்விக்கான தலைமைத்துவத்தை வழங்கல்இ ஆற்றொழுக்கான வகையில் அமையுமாறு மேலாண்மைக்கான கொள்கைகளை உருவாக்குதல்இ அறிமுகப்படுத்தல், நடைமுறைப்படுத்தல் என்பவற்றோடு பேரவைத் தீர்மானங்களை நடைமுறைப்படுத்தல்இ பல்கலைக்கழகத்தின் பொது நிர்வாகம் என்பவற்றுக்குப் பொறுப்பானவர் என்பதனால் கல்வியில் உன்னதம்இ நல்லாட்சி ஆகிய கோட்பாடுகளை உயர்த்திப் பிடிப்பவராக இருத்தல் வேண்டும். வெளிப்படைத்தன்மைஇ பொறுப்புக்கூறும் தகைமை, ஜனநாயக மேலாண்மை மற்றும் சார்புநிலையற்ற திறமிகு தலைமைத்துவம் என்பவற்றையும் நிலைநிறுத்தும் பொறுப்பும் துணைவேந்தருக்குரியது.
   யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகும் விருப்புடையவர் கடினமானதும், நெருக்கடியானதும், சடுதியான நிலைமாறுதல்களை உடையதுமான சூழ்நிலைகளை தன் திறனாற்றல் மற்றும் சாதுர்யத்தின் மூலம் திறம்படக் கையாளக் கூடியவராக இருத்தல் வேண்டும். கைக் கொண்ட காரியத்தின் தன்மையைப் பொறுத்து நெடுமணி நேரம் பணியாற்றக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.
   துணைவேந்தர் பல்கலைக்கழக முறைமையில் கல்விசார் சம்பள அளவுத்திட்டத்தில் அதியுயர் நிலையில் வைக்கப்படுவதற்கு உரித்துடையவர் என்பதோடு அதன்மேல் அச்சம்பளத்தின் 15ூ இனை உபசரிப்புப் படியாகப் பெறுவதற்கும் உரித்துடையவராவார்.
2. விண்ணப்பங்கள் கீழ்வரும் ஆவணங்களை இணைக்க வேண்டும்.
   1. பிறந்த திகதியையும் உள்ளடக்கிய ஒரு முழுமையான சுயதகைமை விபரப் பட்டியல்.
   2. விண்ணப்பதாரி பல்கலைக்கழக அபிவிருத்திக்கான உயர் நோக்குக்கான கூற்றுடன் அவர் நியமிக்கப்படும் பட்சத்தில் தான் அடைய முன்மொழிவன பற்றியதொரு சுருக்கமான விளக்கம்.
   3. தற்போது இப் பதவியை வகிப்பவர் அல்லது முன்னர் இப்பதவியை வகித்தவர் விண்ணப்பதாரி எனின் அவர் தான் தன்னுடைய முன்னைய பதவிக்காலத்தில் சாதித்தவை பற்றியும் எதிர் காலத்திற்கான திட்டங்கள் பற்றியும் கோடிட்டுக் காட்டும் வகையிலான அறிக்கையொன்றைக் கையளிக்க வேண்டும்.
   4. விண்ணப்பதாரி அரச பொதுத்துறை, கூட்டுத்தாபனங்கள்இ நியதிச்சபைகள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தவிர்ந்த ஏனைய உயர்கல்வி நிறுவனங்கள் என்பவற்றில் யாதாவதொன்றில் சேவை புரிபவராயின் அவர் இப்பதவிக்கு நியமிக்கப்படுவாராயின் அவர் விடுவிக்கப்படமுடியுமா என்பதனை அறியத்தரும் பொருட்டு தொழில் கொள்வோரிடமிருந்து ஒரு கடிதம்.

   விண்ணப்பங்கள் "பேரவைச் செயலாளர், பதிவாளர் அலுவலகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம்" என முகவரியிட்டு மூடிய கடித உறையில் 15.10.2025 அன்று பி.ப 3.00 மணிக்கு முன்னதாகக் கிடைக்கக் கூடியதாகப் பதிவுத்தபால் மூலமாக அனுப்பி வைக்கப்படவோ நேரடியாகக் கையளிக்கப்படவோ கூடும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் 'துணைவேந்தர் பதவி' எனக் குறித்திருக்க வேண்டும்.
   மேலதிகமாக, மேலே உள்ள ஆவணங்கள் மற்றும் கையடக்க ஆவண வடிவமைப்பு (PDF) வடிவத்தில் உள்ள வேறு ஏதேனும் துணை ஆவணங்களின் மென்பிரதி எனது மின்னஞ்சல் முகவரி: registrar@univ.jfn.ac.lk இற்கு 15.10.2025 அன்று முடிவடைவதற்கு முன் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.
3. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இல. 03/2023 இல் பரிந்துரைக்கப்பட்டுள்ளபடி, விண்ணப்பங்கள் முடிவு திகதியிலிருந்து இரு மாதங்களுக்குள் மதிப்பீட்டிற்காக மற்றும் நேர்காணலுக்காக பேரவைச் செயலாளரினால் சிறப்பு பேரவைக் கூட்டம் வேலை நாள் ஒன்றில் கூட்டப்படும். ஒரு விதிவிலக்கான சூழ்நிலையில், எந்தவொரு விண்ணப்பதாரரும் சிறப்பு பேரவைக் கூட்டத்திற்கு நேரில் தோன்ற முடியாத நிலையில், செயலாளரிற்குத் தரும் முன்னறிவித்தல் மூலம் நிகழ்நிலையில் (virtual mode) தோன்ற அனுமதிக்கப்படுவார்.
   ஒரு சுருக்கமான 10 நிமிடங்களுக்குக் குறையாததும் 15 நிமிடங்களுக்கு மேற்படாததுமான விளக்கக் காட்சியை நிகழ்த்துவதற்கு விண்ணப்பதாரர்கள் சிறப்பு பேரவைக் கூட்டத்திற்கு முன் அழைக்கப்படுவார்கள். ஆயினும் எந்தவொரு வேட்பாளரும் அவ்வேட்பாளர் பேரவை உறுப்பினராய் இருந்தாலும் கூட வேறொரு வேட்பாளரின் விளக்கக்காட்சியின் போது பங்குபற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்.
   விசேட பேரவைக் கூட்டத்தின் அறிக்கையொன்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை 03ஃ2023 இன் படி மூன்று பெயர்களை விதந்துரைக்கும்படி தயார்செய்யப்பட்டு அனைத்து ஆவணங்களுடனும் இணைத்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு மேலதிக நடவடிக்கைகளுக்காக முன்வைக்கப்படும்.
   முடிவு நாளுக்குப் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் கருத்திற்கொள்ளப்படா.

விசுவநாதன் காண்டீபன்
பதிவாளரும் பேரவையின் செயலாளரும்
பதிவாளர் அலுவலகம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
திருநெல்வேலி

01.09.2025

CR/45971) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செம்மணி...

யாழ்ப்பாணம் செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பான இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகள் 45 நாள்களைக் கொண்டதாக மூன்று பகுதிகளாக இடம் பெற்று வந்தன. இரண்டாம்கட்ட அகழ்வுப் பணிகளின் இறுதி நாள் இன்றாகும். இன்றுடன் அகழ்வுப் பணிகள் நிறைவடையவுள்ளன.

யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் செம்மணிப் புதைகுழி தொடர்பான வழக்கு அண்மையில் விசாரணைக்காக எடுக்கப்பட்டது. இதன்போது, 'செம்மணிப் புதைகுழியில் தொடர்ச்சியான அகழ்வுப் பணிகளை முன்னெடுக்க வேண்டும்' என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் சட்ட மருத்துவ அதிகாரி செல்லையா பிரணவன் சுட்டிக்காட்டியிருந்தார்.

இதையடுத்து, மூன்றாம்கட்ட அகழ்வுப் பணிகளுக்கான பட்ஜெட்டை சமர்ப்பிக்குமாறு நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா உத்தரவிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ,ம-26)

## அமர்ந்திருந்த....

தொகுதி அடையாளம் காணப்பட்டுள்ளது. அதை மீட்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இன்று அந்த என்புத்தொகுதி முழுமையாக மீட்கப்படும் என்று நம்பப்படுகின்றது.

கால் மடித்து இருக்கின்றபடியால் அது சைவ முறைப்படி அடக்கம் செய்யப்பட்டதாக சந்தேகம் எழுந்ததன் அடிப்படையில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து கற்கைகள் பீட சிரேஷ்ட விரிவுரையாளர் சி.ரமணராஜா அழைக்கப்பட்டு மனித எலும்புக்கூடு அடக்க முறை தொடர்பாக சட்ட மருத்துவ அதிகாரி மற்றும் நீதவான் ஆகியோர் வினாக்களை கேட்டு அறிந்து கொண்டதுடன் அது சம்பந்தமான அறிக்கையையும் கோரியுள்ளனர்.

அதேவேளை, குறித்த மனித எலும்புக்கூடு முறைப்படி புதைக்கப்பட்டதாக இல்லை என சிரேஷ்ட விரிவுரையாளர் தெரிவித்திருந்தார். இது தொடர்பான அறிக்கை விரைவில் தாக்கல் செய்யப்படவுள்ளது. (ம-26)

## 30 x 50....

அரியாலை - செம்மணிப் புதைகுழி மீதான இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகளின் 44ஆவது நாள் நடவடிக்கைகள் நேற்று முன்னெடுக்கப்பட்டன. இதன்போதே, மேலும் 5 என்புத் தொகுதிகள் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளன. அத்துடன், ஏற்கனவே அடையாளம் காணப்பட்ட என்புத் தொகுதிகளில் 11 என்புத் தொகுதிகள் நேற்று அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

செம்மணிப் புதைகுழியில் இருந்து இதுவரை 240 என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்ட நிலையில், 235 என்புத் தொகுதிகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. செம்மணிப் புதைகுழியில் இதுவரையான அகழ்வுப் பணிகள் அண்ணளவாக 30x50சதுர அடியிலேயே மேற்கொள்ளப்பட்டன. அதற்குள் இருந்து 240 என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளமை பெரும் அதிர்ச்சிகளை ஏற்படுத்தியுள்ளது. தொடர்ச்சியான அகழ்வுப் பணிகளை முன்னெடுக்கும் பட்சத்தில், மேலும் பல என்புத் தொகுதிகள் மீட்கப்படும் சாத்தியங்கள் உள்ளன என்று பலரும் கருத்துத் தெரிவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. யாழ்ப்பாணம் மேலதிக நீதவான் செ.லெனின்குமார் இந்த அகழ்வுப் பணிகளைக் கண்காணித்து வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ,ம-26)

## யாழ்.பல்கலை...

ஐந்து ஆண்டுகளுக்கு இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. இவருக்கான எழுத்து மூலமான நியமனக் கடிதம் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவால் கடந்த சில தினங்களுக்கு முன்னர் வழங்கப்பட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் வேந்தர் வாழ்நாள் பேராசிரியர் சி.பத்மநாதனின் பதவிக்காலம் கடந்தமார்ச்மாதத்துடன்நிறைவடைந்த நிலையில் புதிய வேந்தராக வாழ்நாள் பேராசிரியர் இ.குமாரவடி வேல் நியமிக்கப்பட்டுள்ளார்.

பேராசிரியர் இ.குமாரவடிவேல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தின் மூத்த கல்வியியலாளராவார். பௌதிகவியல் துறையில் பேராசிரியராக விளங்கிய இவர், விஞ்ஞான பீடாதிபதியாகவும், பதில் துணைவேந்தராகவும் பதவி வகித்தவர். இவரது தகைசார் பங்களிப்பின் காரணமாகப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உறுப்பினராகவும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் நியமிக்கப்பட்டிருந்தவர்.

பல்கலைக்கழகச் சட்டத்தின் படி, வைபவ ரீதியாகப் பதவிவழி வேந்தரே பட்டமளிப்பு விழாவின் போது, நிகழ்வைத் தலைமை தாங்கிப் பட்டங்களையும், பட்டத் தராதரச் சான்றிதழ்களையும் வழங்குவது மரபாகும். எனினும், முன்னாள் வேந்தரின் பதவிக்காலம் கடந்த மார்ச் மாதத்துடன் நிறைவடைந்த போதிலும், புதிய வேந்தரை ஜனாதிபதி நியமிக்காத நிலையில் கடந்த மார்ச் மாதம் 19 முதல் 22 வரை நடைபெற்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 39ஆவது பட்டமளிப்பு வைபவம் வேந்தர் இல்லாமலே நடந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-26,66)

## இலங்கையின்...

வுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளனர்.

வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தலைமையிலான குழுவினரே இவ்வாறு ஜெனிவாவுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளனர். மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடருக்கு முன்பாக அவர்கள் சில விசேட சந்திப்புகளில் ஈடுபடவுள்ளனர் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ம-44)

## திஸ்ஸ...

விரோத திஸ்ஸ விகாரைக்கு எதிராக, இன்று மீண்டும் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

திஸ்ஸ விகாரையை அகற்றுமாறு கோரியும், விகாரை அமைந்துள்ள காணி மற்றும் அதனைச் சூழவுள்ள காணிகளைக் காணி உரிமையாளர்களிடம் மீளவும் வழங்குமாறு வலியுறுத்தியும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் இடம்பெறவுள்ளது.

திஸ்ஸ விகாரைக்கு முன்பாக இன்று மாலை 4 மணிக்கு ஆரம்பமாகும் போராட்டம் மாலை 6 மணிக்கு நிறைவடையும். பௌர்ணமி தினமான நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணியளவில் தொடர் போராட்டம் ஆரம்பமாகி மாலை 6 மணியளவில் நிறைவு பெறும் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (அ,ம-66,26)

## ஐ.நா.வின்...

தாகக் கருதப்படுகின்றது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் எதிர்வரும் 8ஆம் திகதியும், ஸ்ரீலங்கா நாடாளுமன்ற அமர்வுகள் எதிர்வரும் 9ஆம் திகதியும் இடம்பெறவுள்ளன. இவ்வாறான நிலையிலேயே, எதிர்வரும் நாடாளுமன்ற அமர்வில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை தொடர்பில் கூடுதலான கவனம் செலுத்தப்பட வாய்ப்புள்ளதாகக் கருதப்படுகின்றது.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கை மற்றும் புதிதாக முன்வைக்கப்படவுள்ள தீர்மானங்கள் தொடர்பில் ஆளும் மற்றும் எதிரணி உறுப்பினர்கள் கருத்துகளை முன்வைக்கவுள்ளனர் என தெரியவருகின்றது.

அத்துடன், தமிழ்த் தேசியக் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் மனித உரிமை நிலவரங்கள் தொடர்பில் உரையாற்றவுள்ளனர். (அ,ம-44)

## சந்நிதியானுக்கு...

கின்றது. இதன் தொடர்ச்சியாகவே, இன்று காலை 7 மணிக்கு தேர்த்திருவிழாவும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெற்று, மௌனத் திருவிழா மாலை 6 மணிக்கு இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (அ,ம-100,26,66)

## சாவு....

துள்ளது.

முதற்கட்டத் தகவலின் அடிப்படையில் 10 பேர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்திருந்த நிலையில் தற்போது இறப்பு எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

குறித்த வீதியில் ராவணா எல்ல 24 ஆம் கட்டைப் பகுதியில் வேகக் கட்டுப்பாட்டை இழந்த பேருந்து பிறிதொரு வாகனத்துடன் மோதி 500 அடி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்கு உள்ளானது. சாரதி உட்பட 32 பேர் பேருந்தில் பயணித்துள்ளனர்.

விபத்தையடுத்து இராணுவத்தினர், பொலிஸார் மக்கள் இணைந்து மீட்பு நடவடிக்கையில் இறங்கினர். விமானப் படையின் விமானமும் இதற்கு பயன்படுத்தப்பட்டது. தங்காலை நகர சபையின் செயலாளர் உட்பட பணியாளர்கள் 12 பேரும், அவர்களது உறவுகளுமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

விபத்தில் காயமடைந்த 5 சிறார்கள் உட்பட 17 பேர் பதுளை மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வருகின்றனர். அவர்களில் சிலரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (அ,ம-44)

## 'பிரேக்'....

வர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சாரதி மற்றும் நடத்துநருடன் நான் உரையாடிக் கொண்டிருந்தேன். அப்போது ஒரு வளைவில் திரும்பும்போது, பிரேக் பிடிக்கவில்லை என்று சாரதி தெரிவித்தார். ஆனால், நடத்துநரும் அருகில் இருந்த மற்ற பயணிகளும் அவரது கருத்தைக் கேட்டு சிரித்தனர். அவருடைய கருத்தைப் பெரிதுபடுத்தவில்லை.

இருப்பினும், அவர் இரண்டாவது வளைவில் திரும்பியபோது , பிரேக் இல்லை என்பதை நாங்கள் உணர்ந்தோம். அப்போது, பஸ் எதிர்த் திசையில் வந்த ஒரு வாகனம் மீது மோதி, பின்னர் பள்ளத்தில் கவிழ்ந்தது. நான் சுமார்ஒருமணிநேரம்சுயநினைவின்றி இருந்தேன். ஒரு குழந்தை அழும் சத்தம் கேட்டு எழுந்தேன். என்னால் நகர முடியவில்லை என்றார். (அ,ச-இ)

## தோட்டத்துக்கு...

யில், தோட்டத்துக்குச் சென்ற நபரொருவர் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முருகேசு விஜயமோகன் (வயது? 69) என்ற குடும்பத்தலைவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

தோட்டத்துக்குச் சென்ற தனது தந்தையைக் காணவில்லை என்று, அவருடைய மகன் தேடிச் சென்றுள்ளார். இதன்போது, குறித்த நபர் மயக்கமடைந்த நிலையில் இருந்துள்ளார். இதையடுத்து, அவரை உடனடியாக மீட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்த்த நிலையில், அவர் முன்னதாகவே உயிரிழந்து விட்டார் என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம்போதனா மருத்துவமனையின்திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ,ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வேலை ஆட்கள் தேவை**

ஐஸ்கிறீம் கடைக்கு மனேச்சர், கொம்பியூட்டர் வில் கிளார்க், றோல்ஸ் சுத்துபவர்கள், ஐஸ்கிறீம் றூமில் வேலை செய்பவர்கள்

தொடர்பு: 077 233 4950

**கிருபை வேதாகம சபை - யாழ்ப்பாணம்**

வேதாகமப் புத்தகங்களை ஒழுங்கும் கிரமமாக வியாக்கியான முறைப்படி பிரசங்கிக்கின்ற ஒரு திருச்சபை யாழ்ப்பாணத்தில் காணப்படுகிறதா? ஆம், யாழ்ப்பாண ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள ஆசீர்வாத ஒழுங்கையில் 15/1, "கிருபை வேதாகம சபை" அமைந்துள்ளது. ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் காலை 9.00 மணிக்கு ஆராதனை இடம்பெறுகிறது. ஆர்ப்பாட்டங்கள் ஏதுமின்றி தேவனை நல்லொழுக்கமாயும் கிரமமாயும் ஆராதிக்க உங்களை அன்போடு அழைக்கின்றோம்.

**தொலைபேசி : 077 210 6851** (பாவம், மரணம், மரணத்தின் பின்னான வாழ்க்கை குறித்த நம்பிக்கைகள் குறித்தும், ஆத்தும பாரங்கள் குறித்தும் **போதகர் அருளுடன்** கதைக்கலாம்).

(CS/58482) J-1



## சின்ன வெங்காயம் அறுவடை நிகழ்வு

கிளிநொச்சி, செப்.6

மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியில் 'உண்மை விதையிலிருந்து சின்ன வெங்காயம்' உற்பத்தித் திட்டத்தின்மூலம் பயிர்செய்யப்பட்ட வெங்காயத்தின் அறுவடை விழா செல்வாநகர் விவசாயப் போதனாசிரியர் பிரிவில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது. செல்வாநகர் விவசாயப் போதனாசிரியர் செ.செல்வநொயிலின் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது. (ச-25,113)

**காணி விற்பனைக்கு**

நாவற்குளி புகையிரத நிலையத்திலருந்து 100m தூரத்தில் 4 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.

076 330 9761

**காணி விற்பனைக்கு**

பருத்தித்துறை வீதியில் இருந்து 100m தூரத்தில் கட்டப்பிராயில் 4 பரப்பும் 3 குழியும் வீட்டுடனான காணி விற்பனைக்கு உண்டு.

076 330 9761

WhatsApp: +1 905 923 6664

**பராமரிப்பாளர் தேவை**

யாழ்ப்பாணத்தில் சிறிய குடும்பம் ஒன்றை பராமரிப்பதற்கு பெண் பராமரிப்பாளர்கள் தேவை. சம்பளம் 100,000 வரை வழங்கப்படும். 35 வயதிற்குட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு:- 077 774 3185

**கிரியைகள் செய்து தரப்படும்**

கீரிமலை அந்தியேட்டி மடத்தில் அந்தியேட்டிக் கிரியைகள் மற்றும் சாந்திகள், சபிண்டீகரண கிரியைகள் செய்து தரப்படும்.

நகுல உமா குருக்கள் (கீரிமலை ஐயா)


தொடர்பு:- 077 049 8438

**கட்டட ஒப்பந்தகாரர்களுக்கு**

இந்தியா, தாய்லாந்து மற்றும் வியட்நாமிலிருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட கொங்கிறீற் மிக்சர் (Concrete Mixer) மற்றும் இத்தாலியில் இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட மின்னுயர்த்தியும் (Hoist) இப்பொழுது எம்மிடம்.

**குறிப்பு:** இந்தியா, தாய்லாந்து மற்றும் வியட்நாம் கொங்கிறீற் மிக்சர் (Original) வடபகுதியில் எம்மிடம் மட்டுமே. போலிகளைக் கண்டு ஏமாறாதீர்கள்.

"நாங்கள் உங்களோடு"



**ஆர்க் .என். கம்பனி**

- 150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021
- A9 வீதி, எழுதுமட்டுவாழ். 070 191 3571
- A9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன். 021 228 2020

Hotline: 071 535 7799 / 071 535 7803

ஆலய விழாவில் கொளுத்துவதற்கு

## பட்டாசுடன் வந்த வாகனம் தீயில் எரிந்து சாம்பரானது

வவுனியா, செப். 6

வவுனியா வெளிக்குளம் பிள்ளையார் ஆலயத்தின் சப்பறத் திருவிழாவில் கொளுத்துவதற்காக, பட்டாசுகளை ஏற்றிக்கொண்டு வந்த வாகனம், தீயில் எரிந்து நாசமானது. வவுனியா வெளிக்குளம் பிள்ளையார் ஆலயத்தின் சப்பறத் திருவிழா நேற்று இரவு நடைபெறவிருந்தது. அந்தத் திருவிழாவில் கொளுத்துவதற்காக கொண்டுவரப்பட்ட பட்டாசுகளை இறக்கிக் கொண்டிருந்த போதே, இந்த அசம்பாவிதம் ஏற்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் வவுனியா மாநகரசபை தீயணைப்புப் பிரிவினருக்கு அறிவித்ததைத் தொடர்ந்து, தீயணைப்புப் பிரிவினரும் பொது மக்களும் இணைந்து தீயைக் கட்டுக்குள் கொண்டுவர முயற்சித்தனர். எனினும், வாகனம் முற்றாக எரிந்து தீக்கிரையானது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-110)

**மரண அறிவித்தல்**



அன்னை மடியில் 03.10.1954

ஐங்கரன் அடியில் 05.09.2025

**துரைராஜசிங்கம் சேதுகாவலர்**

**(நந்தினி ஸ்ரோர்ஸ் உரிமையாளர் - கண்டி)**

காரைநகர் இடைப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் கண்டி மற்றும் நாச்சிமார் கோயிலடி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட துரைராஜசிங்கம் சேதுகாவலர் நேற்று (05.09.2025) வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற ரகுநந்தனன் மற்றும் ரகுநந்தினி, நந்தகோபி ஆகியோரின் அன்புத் தந்தையும் கிருஷ்ணராசாவின் (டுபாய்) மாமனாரும், அஞ்ஜனா, அன்ஷிகா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான துரைராஜசிங்கம் - செல்லம்மா தம்பதியரின் இளைய மகனும், காலஞ்சென்றவர்களான இராமுப்பிள்ளை (முருகேசு) - சரஸ்வதி தம்பதியரின் மருமகனும், து.நாகேந்திரம் (இலங்கை வங்கி), உமாதேவி (மட்டக்களப்பு) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற திலகவதி (ஆசிரியை) மற்றும் ச.சிவபாதசுந்தரம் (அண்ணாச்சி - சண் பான்சி மட்டக்களப்பு), காலஞ்சென்ற நடராசா மற்றும் இந்திராவதி, பாலசுப்பிரமணியம், இராசபூபதி (மலர்), மகேஸ்வரி, உதயலட்சுமி (ராணி) ஆகியோரின் மைத்துனரும், புவனேஸ்வரி, காலஞ்சென்ற பாலேந்திரன் மற்றும் சுகிதா, காலஞ்சென்ற கனகலிங்கம் மற்றும் திருஞானசம்பந்தர், சந்திரராசா ஆகியோரின் சகலனும், தங்கராசா, வசந்தகுமாரி, ஆகியோரின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை (07.09.2025) தலையாழி ஒழுங்கை, நாச்சிமார் கோவிலடியில் உள்ள அவரது இல்லத்தில் முற்பகல் 09.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைநகர் சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**958/34, தலையாழி ஒழுங்கை**
**K.K.S வீதி**
**நாச்சிமார் கோவிலடி**
**யாழ்ப்பாணம்**

**தகவல்: குடும்பத்தினர்**
**மகள் - 077 165 0778**
**மனைவி - 076 462 3131**
**மருமகன் - 077 114 4102**
**(கிருஷ்ணராசா)**

(CS 59325) E

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.09.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org